# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

ர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 18 திங்கட்கிழமை (02.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 215


# மாதானப் பேச்சுக்கான அனுசரணைப் பணியை மீண்டும் தொடங்குவதற்கு நோர்வே தயார்

## இரு தரப்புகளும் கேட்டுக்கொண்டதும் நமது பணி ஆரம்பமாகும் என்கிறார் போவர்



ஒஸ்லோ,ஜூலை 2

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை காண்பதற்கான தனது அனுசரணைப் பணியை மீண்டும் தொடங்குவதற்கு தாம் தயாராக உள்ளதாக நோர்வே அறிவித்துள்ளது.

"மது அனுசரணைப் பணியை செய்ய வேண்டும் என்பதில் நாம் பணிப்புடனும் அக்கறையுடனும் உள்ளோம்.

"சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளும் - இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மது பணியை மேற்கொள்ளுமாறு கேட்டவுடனேயே நாம் அப்பணியில் ஈடுபடுவதற்குத் பாராகவே உள்ளோம்" - என்று நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன் ர் போவர் நேற்றுத் தெரிவித்தார்.

அனுசரணையாளர் என்ற வகையில் விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு உதவுமாறு இலங்கை அரசாங்கம் நோர்வேயிடம் கேட்டிருப்பதாக நேற்றுச் செய்திகள் வெளியாகி இருந்தன.

அந்தப் பின்னணியில் விசேட தூதுவர் போவர் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு ஒஸ்லோவில் வைத்து தமது நிலைப்பாட்டை அறிவித்தார்.

இலங்கையில் யுத்தமும் வன்செயல்களும் அதிகரித்தமையால் - குழம்பிப்போயிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீளத் தொடங்குவது குறித்த விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிவதற்கு கிளிநொச்சிக்கு செல்முடியாத சூழ்நிலை தோன்றியிருந்தது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பேராதனைப் பகுதியில் இரு தமிழர்கள் கைது

கொழும்பு,ஜூலை 02

பேராதனைப் பகுதியில் வைத்து இரு தமிழர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை சுமார் 3.30 மணியளவில் பேராதனை எரிபொருள் கூட்டுத்தாபன களஞ்சியத்திற்கு அருகில் இருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினர் என்றும் -

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மாவட்டத்துக்கு ஜனாதிபதி திடீர் விஜயம்

கொழும்பு,ஜூலை 2

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அம்பாறை மாவட்டத்திற்கான அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

நேற்றுக்காலை அங்கு சென்ற அவர், படையினரால் மீட்கப்பட்ட பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்தார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத் தூதுவரை அனுப்புமாறு நோர்வேக்கு அரசாங்கம் அழைப்பு

கொழும்பு,ஜூலை 2

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்காக விசேட சமாதானத் தூதர் ஜோன் ஹன்சன் போவரை நேரடிப் பேச்சு நடத்த கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு இலங்கை அரச உயர்மட்டத்திலிருந்து நோர்வேக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்' வார ஏடு இத்தகவலை நேற்று வெளியிட்டிருக்கின்றது.

ஒஸ்லோவில் நடைபெற்ற இணைத்தலைமை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் அவை தொடர்பாக அரசு எடுத்துள்ள புதிய நகர்வுகள் என்பன குறித்த பல தகவல்களை அப் பத்திரிகை வெளியிட்டிருக்கின்றது.

அதன் சில பகுதிகள் வருமாறு:-

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் நடைபெற்ற தமது கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைகள், முடிவுகள் ஆகியவை தொடர்பான விவரங்களை, இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் வழங்குவதென இணைத்தலைமைகள் தீர்மானித்துள்ளன.

இணைத்தலைமைகளின் சார்பில் இவ்விவரங்களை, இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜேர்ஷன் வேர்த் இலங்கை அரசிடம் கையளிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதி என்ற ரீதியில், இவர் இவற்றைக் கையளிக்கவிருக் (08 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிவிவகார அமைச்சர் இன்று இந்தியா பயணம்

புதுடில்லி,ஜூலை 2

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகல்லாகம இரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று புது டில்லி வருகிறார்.

அவர் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி உட்பட பல தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடுவார்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக அவர் இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார்.

### ஆயுதக் கொள்வனவு குறித்தும் பேசப்படும்

இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குவது தொடர்பாகவும் இரு தரப்புகளும் பேச்சுக்களை நடத்தக்கூடும் என்று செய்தி ஏஜென்சிகள் அனுமானம் தெரிவித்தன.

தமக்கு உடனடியாகத் தேவைப்படும் பாதுகாப்பு ஆயுதங்களை இந்தியா வழங்காவிட்டால், விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துவரும் இவ்வேளையில், சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடம் இருந்து அவற்றைக் கொள்வனவு செய்ய நேரிடும் (08 ஆம் பக்கம் பார்க்க)


மாணவர்களே!

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

பிரபல ஆசிரியர் **வே.அன்பழகன்** தயாரித்து வழங்கும் வினாத்தாள் - 1

04.07.2007 உதயனில் வெளிவரும்


## தீர்வு யோசனையை இரு மாதங்களுக்குள் முன்வைக்க இணைத் தலைமை வற்புறுத்து

### அரசு, எதிர்க்கட்சிக்கு தனித்தனிச் செய்தி

கொழும்பு,ஜூலை 2

இலங்கை நெருக்கடி தொடர்பாக ஒஸ்லோவில் கூடி விவாதித்த இணைத்தலைமை, தமிழர் பிரச்சினைக்கான இறுதித்தீர்வு யோசனையை குறைந்தது அடுத்த இரு மாத காலப்பகுதிக்குள் தயாரித்து வெளியிடுமாறு இலங்கை அரசை வற்புறுத்திக் கேட்டிருக்கிறது.

இறுதித் தீர்வுக்கான பங்களிப்பு தொடர்பாக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இணைத்தலைமையிடமிருந்து செய்தி ஒன்று அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது.

ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைவர்களின் விசேட கூட்டத்தின் பின்னர் இலங்கை அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் இணைத்தலைமைகளின் குழுவால் விசேட செய்திகள் இரண்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உதவி வழங்கும் நாடுகள் அரசுக்கு அனுப்பிவைத்த செய்தியில், தற்போது கிழக்கு மாகாண நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்து வருவதனால் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக இலங்கை அரசு அனைத்துக் கட்சி மாநாட்டின் ஊடாக தயாரிக்கப்படும் இறுதி யோசனைகளை எதிர்வரும் இரண்டு மாத காலவரையினுள் தயாரித்து வெளிப் படுத்த வேண்டும் என்றும் -

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு இணைத் தலைமைகள் விடுத்துள்ள செய்தியில், அனைத்துக்கட்சி மாநாட்டைப் பகிஷ்கரிப்பதைத் தவிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியின் யோசனைகளை அனைத்துக் கட்சி மாநாட்டுக்கு சமர்ப்பிக்குமாறு அறியக் கொடுத்துள்ளது எனவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக அடுத்த வாரத்தில் தீர்மானமெடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்க்கும் அதேவேளையில், அனைத்துக் கட்சி மாநாட்டுக்கு இதுவரையில் அரசு தனது உத்தியோகபூர்வ நிலைப்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிக்குப் புறம்பான படுகொலைகளை தடுக்க அமெ.காங்கிரஸ் வற்புறுத்து

நியூயோர்க்,ஜூலை 2

இலங்கையில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நீதிக்குப் புறம்பான படுகொலைகளைத் தடுத்துநிறுத்தவேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்க காங்கிரஸின் 35 உறுப்பினர்கள் இது தொடர்பாக அந்நாட்டு ஜனாதிபதி புஷ்ஷுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளனர்.

"இலங்கையில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிகழ்த்தப்படும் நீதிக்குப் புறம்பான படுகொலைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும். பொதுமக்களின் மனித (08 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் இரவுச் சேவைகள் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு,ஜூலை 2

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து இரவு நேர விமான சேவைகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகின.

கடந்த ஏழு வாரங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் வான்படை விமானங்கள் சர்வதேச விமான நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள விமானப்படைத் தளம் மீது தாக்குதல் நடத்தியிருந்தன.

அந்தத் தாக்குதலை அடுத்து விமான நிலையத்தில் இருந்து இரவு நேர விமானச் சேவைகள் யாவும் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

(08 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொசன் திருநாளான சனிக்கிழமை படையினர் பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் உதவிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 02

பொசன் பெருநாளையொட்டி குடாநாட்டில் பல இடங்களில் அன்னதானமும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கில் உள்ள பகுதிகளில் சுமார் மூவாயிரம் பொதுமக்கள் இந்நிகழ்வுகளில் பங்கு கொண்டதாகப் பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

யாழ்.பாதுகாப்பு படையினரின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் ஆலோசனையின் கீழ் 551, 515 கட்டப் பிரிவுகளில் அன்னதானம் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டன.

551ஆவது பிரதேச படைத் தலைமையகத்தின் கீழ் உள்ள பொற்பதி, புதுக்குடத்தனை, குடத்தனை, அம்பன், மணல்காடு ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற நிகழ்வில் 3ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதுடன் சிறுவர்களுக்கு புத்தகம், அப்பியாசக் கொப்பிகள், பேனைகள், பென்சில்கள் மற்றும் விளையாட்டுப் பொருள்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

தெல்லிப்பழை, இளவாலை, சுன்னாகம் ஆகிய பகுதிகளிலும் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன. (அ-1)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 02

கெற்பேலி மத்தி காளியம்பாள் ஆலயக் குளிர்த்தி அபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (203-207)

* * *

சாவகச்சேரி, சங்கத்தானை முருகமூர்த்தி ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 13ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (203-207)

* * *

திருநெல்வேலி, தலங்காவற் பிள்ளையார் கோயில் தேர்திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (203-111)

* * *

வண்ணார்பண்ணை, காட்டுத்துறை அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 10ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (1)

* * *

வழிசிட்டி வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா இடம்பெறும். தினமும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (1-135)

## சென்.ஹென்றீசில் மாவட்ட மட்ட வினாடி வினாப் போட்டி

வலி.தென்மேற்கு, ஜூலை 02

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தும் நேரடி வினாடி வினாப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

இந்த வினாடி வினாப் போட்டியின் எழுத்துப் பரீட்சை அண்மையில் நடைபெற்ற போது யாழ்.மாவட்டத்தில் உள்ள முன்னணிப் பாடசாலைகள் பல கலந்து கொண்டன.

இதில் அதிக புள்ளிகளைப் பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி ஆகிய நான்கு பாடசாலைகளின் மாணவர்கள் மேற்படி நேரடி வினாடி வினாப் போட்டியில் பங்கு பற்றவுள்ளனர். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பௌதீகத் துறை தலைவர் கலாநிதி என்.சிவயோகம் கலந்து கொள்வார். (203-135)

## சிலாபத்தில் வாகன விபத்து ஒருவர் பலி; 9 பேர் காயம்

சிலாபம் முந்தல் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஒன்பது பேர் காயமடைந்து சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சிலாபம் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று காலை கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கி சென்று கொண்டிருந்த வாகனமே பாதையை விட்டு விலகிச் சென்றதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

வாகனத்தில் இருந்தவர்களே காயமடைந்துள்ளனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பொசனையொட்டி படையினர் குவிப்பு
# அனுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம்
### வேறு இடத்திற்கு மாற்ற வாக்குறுதி

வவுனியா, ஜூலை 02

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 35 தமிழ்க் கைதிகள் நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர்.

அனுராதபுரத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமையன்று நிகழ்ந்த பொசன் பெருநாள் நிகழ்வுகளை குழப்பும் வகையில் தாக்குதல் இடம்பெறலாம் என்ற தகவலின் பேரில் அனுராதபுரம் சிறைச்சாலையின் பாதுகாப்பு வெள்ளிக்கிழமையிலிருந்து அதிகரிக்கப்பட்டு, படையினரும், பொலீஸாரும் சிறைச்சாலையில் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து, தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இவர்களுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏழு படையினரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

சிறைக் கைதிகளின் நிலை குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் விஜிர அபயகுணவர்த்தனவுடன் தொடர்பு கொண்டு பேசினார்.

பிரஸ்தாப கைதிகளை பாதுகாப்பாக வேறு சிறைகளுக்கு மாற்றுவதாக ஆணையாளர் நாடாளுமன்ற உறுப்பினருக்கு உறுதியளித்துள்ளார். (அ-1)

## கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் மாதகல் பகுதியில் கையளிப்பு

வலி.தென்மேற்கு, ஜூலை 2

மாதகல் தெற்கு, மாதகல் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசங்கள் உத்தியோகபூர்மாக "ஹலோ ரஸ்ற்" மிதிவெடி அகற்றும் நிறுவனத்தினால் வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் அப்பகுதியில் இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்வில் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாக இப்பிரதேசத்தை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த ஒரு வருட காலமாக இப்பிரதேசத்தில் மேற்படி "ஹலோ ரஸ்ற்" நிறுவனம் பெரும் எண்ணிக்கையிலான புதைக்கப்பட்ட மிதிவெடிகளை கண்டுபிடித்து அகற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-1-135)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 02

கொடிகாமம் பிரதேச முன்பள்ளிச் சிறார்களிடையே நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளில் தெரிவு செய்யப்பட்ட சிறார்களுக்கும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளாத கச்சாய், மீசாலை குடும்ப முன்பள்ளிச் சிறார்களுக்குமான உபவலய விளையாட்டு நிகழ்வுகள் இன்று கொடிகாமம் மத்தி முன் பள்ளியில் நடைபெறவுள்ளன.

* * *

யாழ்ப்பானம், ஜூலை 02

கோண்டாவில் விவேகானந்தா முன்பள்ளியின் கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு அருணகிரிநாதர் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளன.

க.குகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரத விருந்தினராக நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் கலந்து கொள்வார். (203)

* * *

கைதடி, ஜூலை 02

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலங்களில் கடமையாற்றும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான கருத்தரங்கு எதிர்வரும் 6ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மாவட்ட சமூக சேவை அலுவலர் கிருபாகரன் இதனை அறிவித்துள்ளார். (202-75)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 02

வட்டு-சங்கரத்தை விவசாய சம்மேளனத்தின் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வட்டு. மத்திய கல்லூரியில் நடைபெற உள்ளது. (203)


## 50ஆவது பிறந்தநாள் வாழ்த்து



கைலாசபிள்ளை ஸ்ரீஸ்காந்தன்
அவர்களின் 50ஆவது பிறந்தநாளான
இன்று (02.07.2007) திங்கட்கிழமை
அவரை
"மேருமலை போல் வாழ்வில்
மேன்மை பெறவும்
ஆலமரம் போல் செயலில்
ஆற்றல் பெறவும்
அகவை ஐம்பதை அடையும்
இந்நாளில் வாழ்த்துகின்றோம்."
நீராவியடி வீரகத்திப்
பிள்ளையார் துணைகொண்டு
மேலும் சிறப்புற்று வாழ
வாழ்த்துகின்றோம்.

**அம்மா,**
**தம்பி குடும்பம்**
(வரதன்).
சரண்ஜா தொலைத்தொடர்பகம்,
538, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கைலாசபிள்ளை
ஸ்ரீஸ்காந்தன்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் ஆறுமுகம் துரையப்பா

தோற்றம்: 08-05-1949
மறைவு: 02-06-2007

*சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூரை வதிவிடமாகவும் கொண்ட அமரர் ஆறுமுகம் துரையப்பா அவர்களின் அந்தியேட்டியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளும் இன்று (02.07.2007) திங்கட்கிழமை சிங்கப்பூரில் நடைபெறுகின்றன.*

*ஆயிரம் பிறைகண்ட அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*பழைய பொலிஸ் நிலைய வீதி,*
*சுன்னாகம் தெற்கு.* (சி/52809)

**ஐ.இராமசாமி**
(பேரமகன் - அரசாங்க மத்தியஸ்தர்)

**யாழ்.மாநகர சபைக்குள்,சிவன் பண்ணை வீதியில் இரண்டு வீடுகளுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

தொடர்புகளுக்கு: 077 9604195
(பி.ப 2 மணிக்குப் பின்)

## விற்பனைக்கு

தொலைத்தொடர்பு நிலையத்திற்குரிய கவுண்டர் மேசை, தொலைபேசி (B)பூத் மற்றும் LG-AC (குளிரூட்டி), 5KW டீசல் ஜெனரேற்றர் மற்றும் வீடியோக் கடைக்குரிய சோக்கேஸ், VCDக்கள், வீடியோக் கடை, தொலைபேசித் தொடர்பு நிலையத்திற்குரிய இதர பொருள்கள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 27, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

## தவறிவிட்டது

சண்முக வடிவேல் செல்லகாந்தன் என்பவரது மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் (ME1051), காப்புறுதிப் பத்திரம், இராணுவ வீடோ அனுமதிப் பத்திரம், பெற்றோல் காட் என்பன அடங்கிய கைப் பேர்ஸ் உரும்பிராய்ச் சந்திக்கும் ஏழாலை செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி முன் ஒழுங்கை, ஸ்ரீஜான் ஐஸ் கிறீம் வானில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே 077 6184602

## தவறிவிட்டது

கோண்டாவில் சந்திக்கும் இருபாலைக்கும் இடையில் சேதுபதி தர்மராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (633200513 V), விசேட அடையாள அட்டை, மோட்டார் வாகனத்தின் ஆவணங்கள் உட்பட கறுப்பு நிற Bag தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.

**சேதுபதி தர்மராசா**
**ஸ்ரீராம் பக்தி ஒழுங்கை, கோண்டாவில் வீதி, கோப்பாய் தெற்கு.**

## மணமக்கள் தேவை

யாழ் இந்து கௌரவ, 1965, சித்திரை 2ஆம் பாகம் கிரகபாவம் 40, 8இல் செவ்வாய், லண்டனில் குடியுரிமையுடைய (சொந்தக் கடை வைத்திருப்பவர்) மணமகனுக்கு படித்த மணமகளும் (வெளிநாடு/உள்நாடு) யாழ். இந்து கௌரவ 1970, கார்த்திகை 2ம்பாகம், 12இல் செவ்வாய், கிரகபாவம் 55லண்டனில் குடியுரிமையுள்ள தொழில்புரியும் மணமகனுக்கு படித்த அழகான மணமகளும் தேவை (வெளிநாடு/உள்நாடு).

தொடர்பு: P.S.J.சிந்துஜன்,
[illegible]
T.P: 077 6184134
★ தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும். (62355)


## மரண அறிவித்தல்கள்

### இராசரெட்ணம் ரதீஸ்



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரெத்தினம் ரதீஸ் 30.06.2007 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் இராசரெட்ணம்-கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் அனுஷா (ஜேர்மனி), பிரசன்னா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தர்மதேவனின் (ஜேர்மனி) அன்பு மைத்துனரும் தநுசன் (ஜேர்மனி), தர்மினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2007) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பெ.இராசரெட்ணம்**
**(தந்தை).**

*118, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

### குணரெத்தினம் பொன்னுத்துரை

(நயினாதீவு)



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குணரெத்தினம் பொன்னுத்துரை நேற்று (01.07.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரெத்தினம் - இராமசிப்பிள்ளை தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கதிரேசு - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லலிதாம்பாளின் (வாலாம்பிகை) பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான பாக்கியரெத்தினம், செல்லத்துரை, பாலசுந்தரம் மற்றும் பராசக்தி (கனடா), குமரப்பெருமாள் (கனடா), செல்வரெத்தினம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம், கதிராசிப்பிள்ளை, தம்பிராசா மற்றும் குமரையா (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற நல்லையா மற்றும் மனோன்மணி, சரவணபவான் ஆகியோரின் சிறிய தந்தையும் அமரர் தருமலிங்கம் மற்றும் தருமதேவி ஆகியோரின் மாமனும் பாலமுருகன் (இறுதி வருட யாழ்.பல்கலைக்கழகம்), குகனேசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**த.பாலமுருகன்** (பேரன்).

*5ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (62390)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலாலி ஆசிரியர் கலாசாலையின் மணி விழாவும் 'கலாவதி' நூல் வெளியீடும் அண்மையில் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், கல்லூரி அதிபர் த.காங்கேசபிள்ளை ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரிய மாணவர்களையும் கல்லூரியின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் உரையாற்றுவதையும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- நம்பி)

# மேலதிக சிகிச்சைக்காக இரு நோயாளர்கள் விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர்

## பாதுகாப்புத் தலைமையகம் பயண ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை2

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் இருவர் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான இலவச விமானப் பயண ஏற்பாட்டை பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் செய்து கொடுத்துள்ளது.

மானிப்பாய் வடக்கைச் சேர்ந்தகாயவன் வல்லிபுரம், பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி அம்பிகை சக்திவேல் என்னும் இரு நோயாளர்களுமே மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர் என்று பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த இரு நோயாளர்களுக்கும் மேலதிக சிகிச்சை வழங்குவதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவேண்டியிருந்தது. அதற்கான பயண ஏற்பாடுகளைச் செய்துதருமாறு போதனா வைத் தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஈ. ஞானசோதி, யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதற்கமையவே இந்த பயண வசதி செய்து கொடுக்கப்பட்டது.

(202)

# அத்தியாவசியப் பொருள்களைக் கூடுதல் விலைக்கு தென்மராட்சியில் விற்பனை செய்த நால்வருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூலை2

தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் அத்தியாவசியப் பொருள்களைக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்த நான்கு வர்த்தகர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் சாவகச்சேரி நீதிமன்று அபராதம் விதித்துள்ளது.

கடந்த வாரம் மேற்படி பிரதேசங்களில் திடீர் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. யாழ்.செயலக பாவனையாளர் அலுவலர்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலக புலனாய்வுத்துறை உத்தியோகத்தர்கள் இந்த பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

நிர்ணயிக்கப்பட்ட விலையை விடக் கூடுதல் விலைக்கு சிவப்பரிசி, பருப்பு ஆகிய பொருள்கள் விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் நால்வருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்குகளை விசாரித்த நீதிவான் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

(202-207)

# மந்திகையிலுள்ள மக்கள் வங்கி கருமபீடத்தை கிழமை நாள்களில் இயக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை2

மந்திகையில் இயங்கிவரும் மக்கள் வங்கியின் கருமபீடத்தைக் கிழமை நாள்களிலும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இத்தகவலை வங்கியின் வட வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

மந்திகை வைத்தியசாலைக்கு அண்மையில் சாவகச்சேரி வீதியில் மக்கள் வங்கியின் கருமபீடம் இயங்கி வருகின்றது. இது வார இறுதி நாள்களில் மட்டும் இயங்கி வருகின்றது.

வாடிக்கையாளர்களின் நலன்கருதி இக் கருமபீடத்தை கிழமை நாள்களிலும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(202-160)

# புதிய நிர்வாக சபை

நவாலி,ஜூலை2

நவாலி கிழக்கு (ஜே/135) கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் புதிய யாப்பு விதிகளுக்கமைய இந்த நிர்வாகத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

(202-100)

# மண்எண்ணெய் விலை அதிகரிப்பால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்புறும்!

## குடாநாட்டு விவசாயிகள் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை2

மண்எண்ணெய் விலை அதிகரிப்பை அடுத்து குடாநாட்டின் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு லீற்றர் மண்எண்ணெய் 59 ரூபா 55 சதத்தில் இருந்து 75 ரூபா 55 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்பினால் விவசாயம் மேற்கொள்ளமுடியாத நிலை உருவாகியிருப்பதாக விவசாயிகள் பலர் தெரிவித்தனர்.

தற்போது யாழ்.குடாநாட்டில் பயிரிடப்படும் விவசாய விளைபொருள்கள் தென் பகுதிக்கு ஏற்றுமதி இன்றி இங்கே சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்கொள்கின்றனர்.

இந்நிலையில் மண்எண்ணெய் விலையும் திடீரென 16 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருப்பது விவசாய நடவடிக்கைக்கு பெரும் சுமையை ஏற்படுத்தியிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களும் இந்த மண்எண்ணெய் விலை அதிகரிப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(202-224)

# சிறுவர் மேம்பாட்டுக் கிராமமாக கோவில்குடியிருப்பு தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூலை2

சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனம் தென்மராட்சிப் பிரதேசத்தின் கோவில்குடியிருப்புக் கிராமத்தை சிறுவர் மேம்பாட்டுக் கிராமமாகத் தெரிவுசெய்துள்ளது.

சிறுவர் மேம்பாடு தொடர்பாகத் தெரிவுசெய்யப்பட்ட கிராமிய மேம்பாட்டுக் குழுவினர் இக்கிராமத்தில் சிறுவர்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக நேற்று உதயசூரியன் கிராமத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

(202-207)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஊழியர்களை அங்கு கடமைக்கு வருமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை2

யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை உடனடியாகக் கடமைக்கு மீளத் திரும்புமாறு கிளிநொச்சி பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் ஏ-9 வீதி மூடப்பட்டதால் கடமைக்குச் செல்லமுடியாத பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் கடமையாற்றும் 60இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ளனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள உணவுப் பொருள்கள் விலையேற்றத்தினால் கஷ்டப்படுவதாகவும் தமக்கு கடந்த மார்ச் மாதம் தொடக்கம் வழங்க வேண்டிய சம்பளத்தை வழங்குமாறும் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் கிளிநொச்சிப் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தனர்.

பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரை உடனடியாகக் கடமைக்குத் திரும்புமாறும் கடமைக்குத் திரும்பும் வரை சம்பளம் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(202-207)

# தென்மராட்சியில் கண்நோய்

யாழ்ப்பாணம்,ஜூலை2

தென்மராட்சிப் பிரதேசத்தில் கண்நோய் பரவி வருகின்றது.

பிரதேசத்தின் பல இடங்களிலும் இந்நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என பிரதேச சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (202-207)

# தொகை மதிப்புப் படிவங்கள் விநியோகம்

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கான தொகை மதிப்பு 2007 படிவங்கள் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வந்துள்ளன.

பாடசாலை அதிபர்கள் இன்று திங்கட்கிழமை சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(202-207)

# முகாமைத்துவ உதவியாளர் தரம் உயர்வுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை2

வடக்கு மாகாண அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை மாகாண முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் செப்ரெம்பர் மாதம் நடத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாண அரச சேவையில் கனிஷ்ட ஊழியராக ஐந்து வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்த ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஒன்பதாம் திகதிக்கு முன்னர் திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் அனுப்பிவைக்குமாறு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் தெ.து.விஜயலட்சுமி சுற்று நிருபம் மூலம் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் பிரதேச செயலகங்கள், வலயக் கல்வி அலுவலகங்கள் உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றில் பணிபுரியும் கனிஷ்ட ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(202-207-95)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகர பிரிவில் பல்வேறு செயற்பாடுகள்

நல்லூர்,ஜூலை2

யாழ்.மாநகர சபை, எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சுகாதாரம், கல்வி நூல் நிலைய அபிவிருத்தி, விளையாட்டு, சுற்றாடல், வீதி வேலைப் பகுதி, நீர் வேலைப்பகுதி போன்ற வேலைத்திட்டங்களென ஆறு பிரிவாக தனது பணிகளை முன்னெடுக்கவுள்ளதாக மாநகர சபை ஆணையாளர் மூ.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

இதன்படி சுகாதாரப் பகுதி வேலைத்திட்டத்தில் நோய்த்தடுப்பு, நுளம்புப் பெருக்கங்களைக் கட்டுப்படுத்தல், தாய்சேய் நலன்கள், ஆரோக்கியமான தாய்சேய் தெரிவுகள் என்பனவும் - கல்வி நூலக அபிவிருத்தி விளையாட்டு வேலைத்திட்டத்தில் கண்காட்சி, சிறுவர்களுக்கான விளையாட்டு, கட்டுரை, பேச்சு, ஓவியம் போன்ற போட்டிகளும் -

சுற்றாடல் வேலைத்திட்டத்தில் மரநடுகை, கழிவுப்பொருள் முகா[illegible] சுழற்சிகள் குறித்த கருத்[illegible] விளக்கம், சிறந்த சனசமூக நிலையங்கள் தெரிவு என்பனவும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் வீதி வேலைப்பகுதிக்கான வேலைத்திட்டத்தில் நகரின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள உப வீதிகள், வாய்க்கால்கள் இடிபாடுகள் சீர்செய்யப்படுவதுடன் வீதி அபிவிருத்திக்கான 4 ஆண்டுத் திட்டம் மீளாய்வு செய்யப்படவுள்ளது.

நீர்வேலைப் பகுதித் திட்டத்தில் நீர்த் தாங்கிகள், பம் நிலையங்கள் அலுவலக மற்றும் பொதுக்கிணறுகள் சுத்தம் செய்வதுடன் பழுதடைந்த பொதுநீர் விநியோகக் கம்பங்கள் புனரமைக்கப்படவுள்ளன. அத்துடன் பாவனையாளர்கள் சங்கங்களை அமைப்பதுடன் இவற்றின் பயன்பாடு, கட்டண அறவீடுகள் குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல். வேலைப்பகுதிக்கான வேலைத் திட்டத்தின் கீழ் சந்தை புனரமைப்பு, வடிகால் புனரமைப்பு என்பனவும் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஆணையாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-111)

# சண்டிலிப்பாய் பி.செ. பிரிவில் உலர் உணவு விநியோகம்

வலி.தென்மேற்கு,ஜூலை2

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நலிவுற்றோர் மற்றும் கடந்த ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கான ஏப்ரல் மாதம் 2ஆம், 3ஆம் வாரங்களுக்கான உலர் உணவு விநியோகம் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்தகவலைப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றில் இந்த உலர் உணவு விநியோகம் நடைபெறவுள்ளதாகவும் - ஏற்கனவே உலக உணவு திட்டத்தினால் வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டையை தத்தமது பகுதிச் சங்கக் கிளைகளில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இம்முறை மா, சீனி என்பனவும் வழங்கப்படவிருப்பதாகவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (202-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்வெட்டித்துறை

# யா/சிதம்பரக்கல்லூரி அதிபர் அம்பலம் விஜயநாதன் அவர்களின்

# மணி விழாச் சிறப்பு மலர் - 02.07.2007

### வல்வை சிவன் ஆலய பிரதம குருவின் ஆசியுரை



யாழ்.மாவட்டத்தில் புகழ்பெற்ற கல்லூரிகளில் ஒன்றாக விளங்கிய யாழ்.வல்வை சிதம்பரக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி ஒய்வபெறும் அ.விஜநாதன் அவர்கள் நேரகாலம் தவறாமல் கருமமே கண்ணாகி கல்வி சிறப்புற பணியாற்றியமை எல்லோரும் அறிந்ததே.

பல கல்லூரிகளில் ஆசிரியராக, அதிபராக இருந்து தமது பொன்னான காலங்களை மாணவர்களின் கல்வியில், விளையாட்டுத் துறையில் அரிய பல சாதனைகளைச் செய்து முடித்து இன்று (02.07.2007) திங்கட்கிழமை ஓய்வுபெறும் அ.விஜயநாதன் அவர்களை என்றும் பாராட்டாமல் இருக்க முடியாது. நிரந்தர தொலைக்கல்விப் போதனாசிரியராகக் கடமையாற்றிய அதிபர் அவர்கள் வலது குறைந்த மாணவன் ஒருவனை உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபெறச் செய்து வடமராட்சி மட்டத்தில் 2 ஆம் இடம் பெற வைத்த பெருமை இவரைச் சார்ந்ததாகும். இவருடைய சேவையை வலயத் திணைக்களம் பாராட்டியுள்ளது. அத்துடன் முன்னர் அதிபராக இருந்த பாடசாலையில் கடலக வளம் என்ற பாடத்தை ஆரம்பித்து 100 வீதமான மாணவர்களைச் சித்திபெற வைத்துள்ளார். இவர் அதிபராக இருந்த காலத்தில் எமது பாடசாலையின் மாணவர்கள் ஜி.சி.ஈ.சாதாரணதர, உயர்தர வகுப்புகளில் மிகத் திறமையான பெறுபேறுகளைப் பெற்ற பெருமை இவரைச் சார்ந்தது.

இவரின் ஓய்வு எமது கல்லூரியைப் பொறுத்தமட்டில் பாரிய வெற்றிடமாக இருப்பினும் அவரின் சேவைகள் என்றும் நினைவு கூரத்தக்கவை. அவரின் கல்வி நிர்வாகப் பணிகளை வல்வை மக்கள் என்றும் மறப்பதற்கில்லை. அவர் செய்த சேவைகளை என்றும் நினைவில் நிறுத்தி ஓய்வு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி காலம் வாழ வல்வை வாலாம்பிகை உடனாய வைத்தீஸ்வரப் பெருமான் துணையோடு ஆசிகள் வழங்கி பெரு மகிழ்வடைகின்றேன்.

**பிரம்மஸ்ரீ. பரமேஸ்வர மனோகர சிவாச்சாரியார்,**
தலைவர், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.

### அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி



"கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பதற்கேற்ப அதிபர் அ.விஜயநாதன் செல்லும் இடமெல்லாவற்றையும் சிறக்கச் செய்பவர். யா/சிதம்பராக் கல்லூரியின் கல்வித் தரத்தை உயர்த்தியது மட்டுமல்ல, ஒரு கையை இழந்தவரை அணித் தலைவராகக் கொண்டு யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலையின் 12 வயதுக்குட்பட்ட மாணவர் அணி "சங்ஸ்தா" உதைபந்தாட்டப் போட்டியில் வலய மட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்றுக் கொள்ளவும் காரணமாய் அமைந்தவர்.

அதிபர் அ.விஜயநாதன் ஒவ்வொரு மாணவரதும் தனித்திறமையை அடையாளம் கண்டு பாராட்டி வளர்த்தெடுக்கும் பாங்கு யாவராலும் பின்பற்றத்தக்கது. பாடசாலை வருகைப் பதிவேட்டில் பெயர் குறித்த ஒவ்வொரு பிள்ளையினதும் அறிவு, ஆற்றல், உளப்பாங்கு என்பவற்றைச் செவ்வனே வளர்த்து சிறந்த பிரஜைகளாகச் சமூகத்திற்கு அளிக்க வேண்டியது பாடசாலைகளின் பொறுப்பாகும். இப்பணியில் ஈடுபடும் அனைவரும் ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் பணியாற்ற வேண்டும். இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமானது இப்பணியைச் செவ்வனே நிறைவேற்றிய அதிபர் அ.விஜயநாதன் அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் பொதுச் சேவையில் ஆசிரியப் பணியையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பது வேண்டுகோளாகும்.

"முதியவர்கள் நூலகம்" என்பர். இளையோர் இவரிடம் இருக்கும் திறனைத் தேடிக்கண்டறிந்து கற்க வேண்டும். தமக்குரிய தாக்கிக் கொள்ள வேண்டும். அதிபர் அ.விஜயநாதனும், அவர் தம் குடும்பமும், கல்விச் சமூகமும் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ வேண்டும் என உளமார வாழ்த்துகின்றேன்.

**க.கணேஷ்,**
அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்,
யாழ்.மாவட்டம்.

### பிரதேச செயலாளரின் வாழ்த்து




சிதம்பரக்கல்லூரியின் அதிபராக இருந்து தனது அறுபதாவது அகவையில் ஓய்வு பெற்றுக்கொள்ளும் எனது மதிப்புக்குரிய ஆசான் திருவாளர் அ.விஜயநாதன் அவர்களுக்கு வாழ்த்தும் நன்றியும் கூறுவத்தில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

செய்யும் தொழிலே தெய்வம் என்பார்கள். மற்றவர்களுக்கு நல்லறிவைப் போதிக்கின்ற ஆசிரியத் தொழில் செய்பவர்களும் தெய்வத்திற்கு ஒப்பானவர்களே. கடினமான எந்தப் பாடத்தினையும் இலகுவான நடையில் விளக்கி கற்கத் தூண்டும் ஆர்வத்தை ஏற்படுத்தியவர் எனது ஆசிரியரே.

பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் அதிபர் சேவையில் தரம் I இல் உள்ள சிறந்த நிர்வாகியும் ஆவார். பல அறிஞர்களையும் புகழ் பூத்தவர்களையும் சிறந்த நிர்வாகிகளையும் உருவாக்கித்தந்து தலை நிமிர்ந்து நிற்கும் யா/ சிதம்பரக்கல்லூரியின் அதிபராக தன்னால் இயன்ற அளவுக்கு பெரும்பணி செய்தமையைப் பாராட்டி வாழ்த்தி இவரது ஓய்வுக் காலம் சிறக்க இறைவனை இறைஞ்சுகிறேன்.

**இ. வரதீஸ்வரன்,**
பிரதேச செயலாளர்,பருத்தித்துறை.

### சாதித்துக் காட்டிய அதிபர்



கடந்த 2 வருடங்களாக எமது கல்லூரியின் அதிபர் பதவியை பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் இயன்றவரை சிறப்பாக வகித்து தற்போது ஓய்வுபெற இருக்கின்ற அதிபர் அ. விஜயநாதன் அவர்களை பாராட்டி கௌரவிப்பதில் எமது சங்கம் மகிழ்ச்சி அடைகிறது.

அவர் இக்கல்லூரியில் தனது சேவைக்காலத்தில் பல விடயங்களை சாதிக்க நினைத்து அவற்றை பலரது ஒத்துழைப்புடனும் நிறைவேற்ற உழைத்தார். எனினும் நாட்டுப் பிரச்சினையால் பெருமளவிலான சாதனைகளை அவரால் நிறைவேற்ற முடியாமற் போனாலும் கல்லூரியின் முன்னேற்றத்திற்காக பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவற்றுடன் நெருங்கிய உறவினைப் பேணி கல்லூரியின் வளர்ச்சிக்காக பணியாற்றியதை நன்றியுடன் ஏற்று அவரைப் பாராட்டி நிற்கின்றோம்.

**கோ. சற்குணபாலன்,**
செயலாளர்,பழைய மாணவர் சங்கம்,
சிதம்பரக் கல்லூரி.



## திரு.அம்பலம் விஜயநாதன்

B.A.,Dip.in Education. S.L.P.S.I

பிறப்பு:- புஸ்ப இல்லம், வதிரி, கரவெட்டி
03.07.1947

ஆரம்பக்கல்வி :- யா/தேவரையாளி இந்துக் கல்லூரி.

இடைநிலைக்கல்வி :-யா/தேவரையாளி இந்துக் கல்லூரி.

உயர்கல்வி :- யா/ ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை,
நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

கல்வித்தகைமை :- கலைமாணி (B.A.)பேராதனைப் பல்கலைக்கழகம்.

தொழில்தகைமை :-பட்டப்பின் டிப்ளோமா
(Dip.in Education) யாழ்.பல்கலைக்கழகம்

### சேவை விவரம்

01.11.1976 - 18.02.1978 - ஆசிரியர், அம்பாறை / அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மி.பாடசாலை.

19.02.1978 - 02.01.1993 - ஆசிரியர், யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

04.01.1993 - 05.02.1994 - உபஅதிபர், யா/தேவரையாளி இந்துக்கல்லூரி.

07.02.1994 - 31.01.2001 - அதிபர், யா/வதிரி வடக்கு மெத.மிசன் தமிழ் வித்தியாலயம்.

01.02.2001 - 17.07.2005 - அதிபர், யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.பாடசாலை.

18.07.2005 - 02.07.2007 - அதிபர், யா/சிதம்பரக்கல்லூரி, வல்வெட்டித்துறை.

★ தொலைக்கல்விப் போதனாசிரியர் -கரவெட்டி மத்திய நிலையம்.
★ தொலைக்கல்விப் போதனாசிரியர் (சமூகக்கல்வி) - பருத்தித்துறை மத்திய நிலையம்.
★ சேவை முன்பயிற்சி போதனாசிரியர்
★ க.பொ.த.உயர்தர பொருளியல் உதவிப்பரீட்சகர் - 1983-1993

### கோட்டக் கல்வி அதிகாரியின் வாழ்த்து



இப்பிறப்பில் பிறந்தோர் அக்காலத்தின் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தால் மட்டுமே சமூகம் நினைவு கூரும். இந்த வகையில் அம்பலம் விஜயநாதன் அவர்கள் கல்வித் துறையுடன் மட்டுமல்லாமல் விளையாட்டுத்துறை, சமயத்துறை, அரசியல்துறை போன்ற துறைகளில் முன்னோக்கிச் சென்று பல சாதனைகளைப் புரிந்துள்ளார்.

அவர் 1976ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இம்மண்ணின் மாணவ மணிகளுக்காக ஆற்றிய சேவைகள் அளப்பரியன. இன்று கூட அவரின் மாணவர்கள் யாழ். குடாவிலும் சரி, வடமராட்சிப் பிரதேசத்திலும் சரி பல உயர்ந்த பதவிகளில் உள்ளார்கள். அவர் ஒரு சிறந்த ஆசிரிய ஏணியாக உள்ளாரென்பது தெட்டத்தெளிவாகின்றது. அவருக்கு வயதுதான் அறுபதே ஒழிய இளமையான வராகவே காட்சி கொடுக்கின்றார். அவர் நீண்ட காலம் சமயதிற்கு சமூகதிற்கும் தொண்டாற்ற இறைவன் நீண்ட ஆயுள் வழங்க வேண்டும்மென இறைஞ்சி நிற்கிறேன்.

**ரி. ரகுநாதன்,**
கோட்டக்கல்வி அதிகாரி, பருத்தித்துறை.

### ஆடம்பரங்கள் அற்ற மௌன மனிதர்



"ஆடை அணிகலன் ஆடம்பரங்கள் ஆண்டவன் விரும்புவதில்லை
அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும் ஆலய வழிபாடு இல்லை"

இதற்கு ஒரு நல்ல உதாரணம் அதிபர் அ. விஜய நாதன் அவர்கள். மிகவும் சாதாரண மனிதர். ஆடம் பரங்கள் அற்ற ஒருமௌன மனிதர். சேவையே குறிக்கோளாகத் திறம்பட சேவை ஆற்றிய தன்னலம் கரு தாத சேவையாளன்.

ஒரு சிறு பாடசாலையிலிருந்து பெரிய பாடசாலைக்கு வந்து விட்டாரே, எப்படி எல்லோரையும் கட்டியாளப்போகிறார் என்று நாங்கள் ஏங்கியது உண்டு. ஆனால் அவர் எல்லோரையும் வியப் பில் ஆழ்த்தி, சிதம்பரக் கல்லூரியில் அதிபர் பதவியை திறம்பட செய்து எல்லோரினதும் பெரு மதிப்பைப் பெற்றுவிட்டார்.

அன்னாருடன் நான் பழகியது சிறிய காலம் என்றாலும், அவரின் ஆற்றல், திறமை, வழிநடத்தல் என்பவற்றைப் போற்றி புகழாமல் இருக்க முடியாது. அவரின் வல்வைக் காலம் சிறப்பாக அமைந்துவிட்டது.

"வாழ்க்கை என்றும் வண்டாடும் வண்ண மலர்ச்சோலையாக இருப்பதில்லை அது வாழத் தெரிந்தவனுக்கு வசந்தம் வழுக்கி விழ்ந்தவனுக்கு புயல்"

இது இரண்டையும் உணர்ந்து சமனாக நடப்பவனே வாழ்க்கை யில் வெற்றிபெறுகிறான். அந்த வகையிலே அதிபர் அ. விஜயநாதன் அவர்கள் உயர்ந்த மனிதனாக வாழ்ந்து உயர்ந்து நிற்கின்றார். அவர் எங்கு சென்றாலும் சீரும்சிறப்புடனும், பூரணசுகத்துடனும் என்றென்றும் வாழவேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

**Dr.க. மயிலேறும் பெருமாள்,**
மாவட்ட வைத்திய அதிகாரி, மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை.

**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.**

### வல்வை முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி



வல்வை சிதம்பரக் கல்லூரி அதிபர் அ.விஜயநாதன் அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்ல இருக்கிறார் என கேள்விப்பட்டும் ஒரு கணம் கவலை அடைந்தேன். இவர் செயல்திறன் கொண்டவர். அத்துடன் சிறந்த தலைமைத்துவ பண்பும் கொண்டவர். இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். அதுமட்டுமன்றி கல்லூரியை சிறந்த ஒரு கல்லூரியாக கொண்டுவர வேண்டும் என்ற பேரவாவுடன் இருந்தவர். தனக்கே உரித்தான பாணியில் பாடசாலைச் செயற்பாடுகளை வழிநடத்திச் சென்றவர்.

இவ்வாறாக பல அரிய சேவைகளை இக்கல்லூரிக்கு செய்த அதிபர் அவர்கள் இன்று (02.07.2007) திங்கட்கிழமை ஓய்வுபெற்றுச் செல்ல இருப்பதும் எமக்கு கவலையளிப்பதுடன் காலத்தின் நியதியையும் ஏற்றேயாக வேண்டும்மென்ற மனப்பக்குவத்தை இக் கல்லூரிச்சமூகம் உணர்ந்துகொள்ளவேண்டும். மேலும் இவர் தனது ஓய்வுக்காலத்தில் தம் குடும்பத்தினருடன் மிகவும் மகிழ்சியுடனும் நோய், நொடியின்றி ஆரோக்கியத்துடன் வாழ எல்லாம் வல்ல எம் முத்துமாரி தாயை வேண்டி அம்பாளின் பூரண அருளாசி கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

**சிவஸ்ரீ.சேதுஸ்ரீ பாஸ்கர தேசிகர் J.P.,**
சிவாச்சாரிய பிரதிநிதி,அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்.

### ஆளுமைப் பண்பு மிக்க அதிபர்



இலங்கை அதிபர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்த அ.விஜயநாதன் சிறந்த சமூகக் கல்வி, பொருளியல் ஆசிரியராக யா/நெல்லியடி மகா வித்தியாலயத்தில் கடமையாற்றியவர். அதிபராக யா/வதிரி வடக்கு, மெ.மி.த.க. பாடசாலையிலும் பின்னர் யா/சிதம்பரக் கல்லூரியிலும் கடமையாற்றினார். சிறந்த ஆசிரியராக இருந்தமையால் தனது சக ஆசிரியர்களுக்கு கௌரவமும் மதிப்புமளித்து, முரண்பாடுகளின்றித் தனது நிர்வாகக் கடமைகளை ஆற்றினார். முரண்படாது நிர்வகம் நடத்தும் ஆளுமைப் பண்பே ஒரு சிறந்த அதிபரின் அணிகலாகும். தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும் என்பதற்கு அதிபர் அ.விஜயநாதன் ஒரு சிறந்த உதாரணமாவார். அவரது பிள்ளைகள் கல்வியிற் சிறந்து விளங்குகின்றனர். தனது ஓய்வு காலத்திலும் கல்வித் தொண்டாற்ற வேண்டும் என்பதுடன் சிறப்புடன் வாழ எனது வாழ்த்துக்கள்.

**வே.தி.செல்வரெட்ணம்,**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்.மாவட்டம்.

### வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து



1976ஆம் ஆண்டில் ஆசிரியராகத் தனது கல்விப் பணியை ஆரம்பித்து அதிபராகப் பதவியுயர்வு பெற்று ஓய்வுபெறும் அ.விஜயநாதனுக்கு வாழ்த்துரை வழங்கு வதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். அக்கரைப் பற்று இ.மிசன் வித்தியாலயத்தில் 1976 ஆம் ஆண்டில் இவர் ஆசிரியராக இணைந்து கல்வியுலகிற் பிரவேசித்தார். பின்னர் 1978 ஆம் ஆண்டில் யா/நெல்லியடி ம.ம. வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று ஆசிரியப் பணிபுரிந்தார். 1991 ஆம் ஆண்டில் இலங்கை அதிபர் சேவைப் பரீட்சையிற் சித்தியடைந்து வதிரிவடக்கு மெ.மி.பாடசாலையின் அதிபர் பதவியை அலங்கரித்தார். இதன் பின்னர் வல்வை சிதம்பரக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி அப்பாட சாலையின் அபிவிருத்திக்கு வழிகாட்டினார். ஓய்வின் பின்னரும் அவர் கல்விப்பணி தொடர வாழ்த்து கிறேன்.

**வ.செல்வராஜா,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,வடமராட்சி.

### தன்னடக்கம் காக்கும் நலாசான் என் ஆசான்



"கதம்காத்துக்கற்று அடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து"

இக்குறள் நெறியின் வழிகாட்டலுக்கிணங்க வாழ்ந்து கொண்டிருப்பவர் என் குருநாதராகிய எங்கள் கல்லூரி அதிபர் அவர்கள். சிறந்த புலமைமிக்க கல்விமான், தன்ன டக்கமிக்க சிறந்த பண்பாளன் இவருக்கு நான் மாணவ னாக இருந்ததையிட்டு பெருமைப்படுகின்றேன்.

எனக்கு நல்லாசானாய், நல்லதிபராய், நல்லதிகாரியாய் இருந்து என்னை வழிப்படுத்தி முழுவமாய் வளர்த்தெடுத்த என் ஆசான் இன்று சேவையிலிருந்து இளைப்பாறுகின்றமை என் மனதைப் பெரிதும் பாதிக் கிறது. இருப்பினும் காலத்தின் நியதியை நாம் ஏற்றே தீரவேண்டும்.

தன்னுடைய ஓய்வு காலத்தில் இவர் சகல சுகமும் பெற்று தன் குடும்பத்தினருடன் நீண்ட நெடுங்காலம் மகிழ்வாய் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பணிந்து வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

**ப. பிரபாகரன்**
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

### இயல்பலகலைகளைத் தந்தவர் எங்கள் அதிபர்



"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" எமக்கு எண்ணும் எழுத்தும் தந்து இயல்பல கலையும் தந்து இன்று வரை கல்லூரியின் தலைவராய் நின்று ஓய்வுபெறும் கடமையாளன் மதிப்பிற்குரிய அ.விஜயநாதன் அதிபர் அவர்கள் அன்பும், பண்பும், கடமையும், கண்ணியமும் நிறைந்த சிறந்த அதிபராவார். மாணவர்கள், ஆசிரியர்களின் சேவைகளையும், தேவைகளையும் மட்டுமல்லாது சமுகத்தின் தேவைளையும் நன்கு புரிந்துகொண்டு சேவையாற்றிய நற்பண்பாளர் ஆவார்.

இன்றுடன் சேவையில் இருந்து ஓய்வுபெறும் இவரும் இவரது குடும்பத்தினரும் நூற்றாண்டு காலம் இனிதே வாழ வாழ்த்துகிறோம்.

**சி. அருள்ஜோதி,**
தலைவர்,உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,சிதம்பரக் கல்லூரி.

### கல்லூரி என்னும் மரத்தில் பூத்த அதிபர் எனும் பூவே....



கல்லூரி என்னும் மரத்தில் அதிபரென்னும்
பூ மலர்ந்த காலமிது
ஆனால் இன்று அந்த மலர் மரத்தை விட்டு
விழுந்ததன் மாயமென்ன
நீங்கள் எம் மனதை விட்டு பிரியாது
பிரியா விடைபெற்ற போதிலும்
என்றென்றும் உங்கள் புகழ் இக்கல்லூரியில் உலாவும்
தாங்கள் இந்த நாட்டில் பல நற்பிரஜைகளை உருவாக்க
எமது வாழ்த்துக்களை காணிக்கை ஆக்குகிறோம்
வாழ்க உமது புகழ்! வளர்க உமது பணி!

**த. திவாகர்,**
தலைவர், மாணவர் மன்றம், சிதம்பரக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொது தராதரப் பத்திர (உ/த) ப் பரீட்சை, ஓகஸ்ட் 2007

## தமிழ்

முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும் இரண்டாம் மூன்றாம் பகுதியிலிருந்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வினாவையேனும் உள்ளிட்டு மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி-1

01. பின்வரும் செய்யுட் பகுதிகளுள் எவையேனும் மூன்றினைத் தெரிவு செய்து
அ) அவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ) தடித்த எழுத்தில் உள்ள பகுதிகளின் சிறப்பை விளக்குக.

i) மையற விளங்கிய மணிநிற விசும்பின்
கைதொழு மரபின் எழுமீன் போலப்
பெருங்கடற் பரப்பினிரும் புறத்தோயச்
சிறுவெண் காக்கை பலவுடன் ஆடும்
துறை புலம் புடைத்தே தோழி பண்டும்
உள்ளூர்க் குரீஇக் கருவுடைத் தன்ன
பெரும் போது அவிழ்ந்த கருந்தாட் புன்னைக்
**கானலங் கொண்கன் தந்த**
**காதல் நம்மொடு நீங்கா மாறே.**

ii) அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறிவிடும்
இன்மை ஒருவற்கு இழிவன்று சால்பெனுந்
திண்மை உண்டாகப் பெறின்
இலமென்றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னு னல்லாள் நகும்
அற்றார் கொன் றாற்றாதான் செல்வமிக நலம்
**பெற்றாள் மூத்தற்று.**

iii) அஞ்சு அடுத்த அமளி அலத்தகப்
பஞ்சு அடுத்த பரிபுலப் பல்லவ
நஞ்சு அடுத்த நயனியர் நவ்வியின்
துஞ்ச அத்தனை மைந்தரும் துஞ்சினர்.

**ஏந்து செல்வத்து இமையவர் ஆம்என**
**கூந்தல் தெய்வ மகளிர் கொண்டாடினர்**
வேந்தர் ஆதி, சிவிகையின் வீங்கு தோள்
மாந்தர் காறும் வரிசை வாழாமலே.

iv) இருகதிர் குறுவான் அதனையும் உன்னிடமே
இறக்குவன் உனைப் பரிபாலித்து
அருளவும் வணங்கித் துதிக்கவும் மிகுந்தோர்
தமை யமைத்து அருள்வன் அன்பு ஓங்கி
பெருகு பார்ப்பு அதனைத் தேடி வந்து அடையும்
**பறவைபோல் பிள்ளையைத் தேடி**
**வரும் அனையினைப் போல் எனது கல்குகள் உள்**
**மாட்டினில் வருகவும் புரிவேன்.**

(24 புள்ளிகள்)

02. "அ" பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்குதருக.

அல்லது

"ஆ" பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) தேவி வணக்கம்

அன்னையே யருளுருவே அகிலமுமீன்
றளித்தருளு மரசி யேசீர்
மன்னுநிலை யியற்பொருளு மியங்கியலும்
வகைப்பொருளும் வகுத்த வாற்றால்
இன்னலற வெமைப்புரந்த வின்னமுதப்
பெருங்கடலே யிறைவி யேநின்
பொன்னடியை நிதந்துதித் தோங் கடைக்கணித்துக்
கருணை மழை பொழிவா யம்மா.

எண்ணுங்கா லுலகினுக்கோ ராதார
மாயநுவற வியல்பு நீயே
மண்ணின்சீ ருருவாகி மன்னியவ
ணியன்றோ வாரி யாகி
உண்ணுந்நீ ருருவாய வுத்தமியு
நீயன்றோ வுயர்வொப் பில்லாய்
விண்ணின்பே ருருவாகி யெவ்விடத்து
நிறைந்து நின்ற விரிவு நீயே.

வியாத பெருவலிமை வைணவியே
பிரபஞ்ச வித்து மாகித்
தாயாகித் தரணியைத் தோற்றுவித்த
தனிமுதலே தவத்தார் வாழ்வே
மாயாரு பத்துடனே மருளளிக்கும்
வனப்புடையார் மயக்கந் தீர்த்துத்
தீயாத பெருமுத்தித் தடங் கரையிற்
செலுத்துகின்ற செல்வத் தாயே.

i) தேவியின் பெருமையினைக் கவிஞர் எடுத்துரைக்கும் விதம் யாது?
ii) இக்கவிதையில் இடம்பெறும் உருவக அணிகள் எவையெனக் காட்டுக.
iii) இப்பாடலின் எடுத்துரைப்பு முறை, மொழிநடை பற்றி யாது கூறுவீர்?

அல்லது

(ஆ) சின்னம்மாவின் குரலைக் கேட்டதும் குழந்தை தன்கையிலிருந்து தட்டுகளை எறிந்துவிட்டு ஓடிவந்து அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டே "அம்மாளை எங்கே போவச் சொன்னாய்?" என்றது. ராமாயி தன்னையும் அறியாமல் "சுடுகாட்டுக்கு" என்றுவிட்டாள். ஆனால் அடுத்த கணமே "ஐயோ ஏன்தான் இப்படி வார்த்தை வருதோ?" என்று தன்னையே நொந்து கொண்டாள். அதே சமயம் "போகச் சொன்னவுடன் போயிடுவாளா?" என்ற சத்தம் கேட்டவுடன் திரும்பிப் பார்த்தாள்.

ஆழ்ந்து யோசிக்காமல் உணர்ச்சியின் வேகத்தில் ஒவ்வொரு சமயம் நிதானமின்றிச் சொல்லிவிடுகிறோம். காலம் கவிழ்ந்து விடும். வார்த்தை நிற்கும். அதனால் சில சமயங்கள் அபாயம் கூட நேர்ந்து விடுவதும் உண்டு. ஆனால் அப்படியொன்றும் இப்பொழுது ராமாயிக்கு நேர்ந்து விடவில்லை. ஏனெனில் இந்தக் கேள்விக்குச் சொந்தக் காரியான செல்லக்காள் அப்படிப்பட்ட குணம் படைத்தவள் அல்ல.

"காத்தாலே எப்பவும் இதுதானா?" என்றாள் செல்லக்காள். "நீயும் பக்கத்திலே பார்த்துக்கிட்டுத்தானே வருகிறாய்" என்றாள் வருத்தத்தோடு ராமாயி.

"அவள் குணம் தெரிந்தே இருக்குதே; நீ ஏன் வாய் குடுத்துக்கிறாய்?" என்று செல்லக்காள் கேட்கவும் "நானா வாய் கொடுக்கிறேன்?" என்று தலைமேல் கைவைத்தாள் ராமாயி.

i) இவ்வுரைப் பகுதியினை அடிப்படையாகக் கொண்டு ராமாயி என்ற பாத்திரத்தின் குணவியல்புகளை விளக்குக.
ii) செல்லக்காள் பற்றி நீர் யாது கருதுகின்றீர்?
iii) ஆசிரியரின் கதை சொல்லும் முறையினையும் மொழிநடையினையும் பற்றி எடுத்துரைக்க

(16 புள்ளிகள்)

### பகுதி-11

03. 'நல்குரவு' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
(அ) நல்குரவின் கொடுமை
(ஆ) நல் கூர்த்தாரின் குற்றம்
(இ) நல்குரவு வரின் செய்யக்கூடியது

(15 புள்ளிகள்)

04. திருவடி சூட்டுப் படலத்தில் இராமனை அரசாளும்படி கூறும் பகுதியில்
(அ) வசிட்டர் இராமனை வேண்டுவது
(ஆ) இராமன் வசிட்டரின் கூற்றுக்களை மறுத்துரைப்பது
(இ) இருவரினதும் உரையாடல் பாங்கிலிருந்து உமது உள்ளத்தில் எழும் இவர்கள் பற்றியதான மனப்பதிவு ஆகியவற்றைத் தெளிவுபடுத்துக.

(15 புள்ளிகள்)

05. இராட்சணிய சதிரப் படலத்தில்
(அ) விரோதிகள் விளைத்த துன்பங்களைத் தாங்கிக் கொண்ட யேசு பிரானின் பெருமைகளும்
(ஆ) சிலுவைகளைச் சுமந்து செல்வதன் நோக்கமும்
(இ) யேசுபிரான் அம்மக்களுக்குச் சொன்ன ஆறுதல் வார்த்தைகளும் சித்தரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

06. 'நாகம்மாள்' நாவலில்
(அ) சின்னப்பன்
(ஆ) ராமாயி
(இ) கெட்டியப்பன்
(ஈ) முத்தையா
ஆகிய பாத்திரங்கள் பெறும் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க.

(15 புள்ளிகள்)

07. வ.ராமசாமியின் 'மகாகவி பாரதியார்' என்ற கட்டுரையிலுள்ள
(அ) பாரதிமீது அவர் கொண்ட பற்று
(ஆ) "இளமையிற் கல் முதுமையில் மண்" என்ற பாரதியின் கூற்றிலிருந்து நீர் கூறும் விளக்கம்
(இ) வ.ரா வின் நடைச்சிறப்பு ஆகியவற்றை எடுத்துக் காட்டுக.

(15 புள்ளிகள்)

08. (அ) நிர்மலானந்தரின் தவநிலை
(ஆ) தவப்பயன் சிறுகதையூடாக ஆசிரியர் வெளிப்படுத்தும் தத்துவ உண்மை
(இ) கதை சொல்லும் பாணி ஆகியவற்றை அழகிரிசாமியின் 'தவப்பயன்' சிறுகதையினை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்குக.

(15 புள்ளிகள்)

09. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக.
(அ) தலைவியின் கூந்தல் மீது கொண்ட பற்று "கொங்குதேர் வாழ்க்கையில்" சித்தரிக்கப்படுமாறு
(ஆ) தமிழின் மேன்மையினை எடுத்துக்காட்ட பாரதி கூறும் நியாயங்களை "தமிழ் பாஷைக்குள்ள குறைகள்" என்ற அவரின் கட்டுரையிலிருந்து எழுதுக.
(இ) வழக்குரைக் கதையில் கண்ணகியின் தோற்றம் பற்றிய வர்ணனை.
(ஈ) நாச்சியார் திருமொழியில் வெளிப்படும் கண்ணபிரானின் பெருமைகள்.
(உ) மகாத்மா காந்தி பஞ்சகத்தில் காந்தியின் மீது பாரதி கொண்ட பற்று.

(15 புள்ளிகள்)

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

### வணிகக்கல்வி

ஆக்கம்: திரு.பசில்

### பகுதி-1

01. கீழே தரப்படும் கூற்றுக்களில் இலங்கை தொடர்பான மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1) ஒரு விவசாய நாடு 2) ஒரு கைத்தொழில் நாடு
3) ஒரு சேவைத்துறை சார்ந்த நாடு
4) ஒரு ஏற்றுமதி சார்ந்த நாடு
5) மேற்கூறிய எதுவுமல்ல

02. விலங்குகளை இறைச்சிக்காக வளர்ப்பது கீழே தரப்படுபவற்றில் எதனுள் அடக்கப்படும்
1) கைத்தொழில் 2) வர்த்தகம் 3)வியாபாரம்
4) உதவிச் சேவைகள் 5) மேற்கூறிய எதுவுமல்ல

03. பின்வருவனவற்றுள் கைத்தொழில் பொருளாகக் கருதப்பட முடியாதது
1) மூலப்பொருட்களும் பகுதிகளும்
2) உற்பத்தி செய்யப்பட்ட உள்ளீடுகள்
3) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகள்
4) மூலதனப் பொருட்கள்
5) விநியோகமும் வணிகச் சேவைகளும்

04. வணிகமொன்றினது உற்பத்திக் கிரயத்தை இழிவுபடுத்தக் கூடியதாக இருப்பது அந்த வணிகத்திற்கு,
1) பலம் 2) பலவீனம் 3) வாய்ப்பு
4) அச்சுறுத்தல் 5) உள்ளீடு

05. வணிகத்தின் அமைவிடத்தெரிவு பின்வருவனவற்றில் எத் தொழிற்பாட்டினுள் அடக்கப்படும்?
1) நிதியும் கணக்கீடும் 2) உற்பத்தி 3) ஆளணி
4) ஆராய்ச்சி அபிவிருத்தி 5) நிர்வாகம்

06. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணியாகக் கருத முடியாதது
1) போட்டி வியாபாரத்தை உந்துவித்தல்
2) நுகர்வோர் கல்வியை விருத்தி செய்தல்
3) சூழல் பாதுகாப்பில் ஈடுபடல்
4) சில பொருட்களுக்கு விலைக் கட்டுப்பாட்டைப் பேணல்
5) பொய்யான தகவல் அளிக்கும் வியாபாரிகளின் மீது நடவடிக்கை எடுத்தல்

07. "திரு.க. பனான்டோ எனும் அரச வைத்திய அதிகாரி தனது பொருளாதார நலன்களைமுன்னேற்றுவிக்கும் வகையில் பங்குடமை அமைப்பு ஒன்றில் இணைந்துகொண்டார்" இங்கு திரு.க. பனான்டோ உண்மையில்
1) இயங்கும் பங்காளி 2) தூங்கும் பங்காளி
3) பெயரளவில் பங்காளி 4) போலிப் பங்காளி
5) இரகசியப் பங்காளி

08. பொதுக் கம்பனி ஒன்றின் இழிவுக்கட்டணம் திரட்டப்பட்டதை உறுதிப்படுத்துவது
1) முன் விபரணம் 2) முன் விபரணத்திற்கு பதிலான கூற்று
3) சட்டமுறை அறிக்கை 4) ஆண்டறிக்கை
5) அமைப்புப் புறவிதி

09. பின்வருவனவற்றுள் கணினி மென்பொருள் வகையைச் சேராதது எது?
1)சொல் செயன்முறைப்படுத்தல்
2) எக்ஸெல்
3) எம்.எஸ் டொஸ்
4) செய்முறைப்படுத்தும் அலகு
5) அக்ஸஸ்

10. பின்வருவனவற்றில் எது தொழில்நுட்ப சூழல் என்பதில் அடக்கப்படக்கூடியது
1) பணக் கொள்கை 2) வரிவிதிப்பு
3) வாழ்க்கை முறை 4) நுகர்வோர் எதிர்பார்ப்புக்கள்
5) வீட்டுச் சூழல்

11. பின்வருவனவற்றுள்எதில் சிலசமயங்களில் ஒரு அல்லது சில உடமையாளர்களுக்கு மூலதன எல்லைக்கு மேல் இடரைத் தாங்கிக்கொள்ளக்கூடிய நிலை ஏற்படலாம்?
1) வரையறுக்கப்பட்ட சொந்தக் கம்பனியில்
2) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியில்
3) வரையறுக்கப்பட்ட மக்கள் கம்பனியில்
4) வரையறுக்கப்பட்ட பங்குடமையில்
5) மேற்கூறிய எவையுமல்ல

12. வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் அனுகூலமாகக் கருத முடியாதது,
1) அதிகளவு வணிகம்
2) அதிகளவு பிரமாணங்கள்
3) அதிகளவு வாடிக்கையாளர்கள்
4) அதிகளவு வளர்ச்சி
5) அதிகூடிய வாழ்க்கைக் காலம்

13. கப்பல் முகவர் நிலையத்தின் பணி அல்லாதது,
1) வியாபார ஆவணங்களை ஒழுங்கு செய்தல்
2) கப்பலை ஒழுங்கு செய்தல்
3) பொதி செய்தலுக்கு உதவுதல்
4) பொருட்களை அப்புறப்படுத்த உதவுதல்
5) தோற்றுவாய் சான்றிதழை வழங்குதல்

14. வர்த்தக வங்கியின் பணி அல்லாதது,
1) வட்டியைப் பெறுதல் 2) வட்டியை வழங்குதல்

(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 71ஆம் ஆண்டு திருவோணம் 7ல் செல்வாய் பிரான்ஸில் நிரந்தர குடியுரிமையுள்ள மணமகனிற்கு பிரான்சில் வசிக்கும் மணமகள் தேவை. தொடர்பு துர்க்கா திருமணசேவை 9,சங்கிலியன் வீதி ,நல்லூர், யாழ் .பதிவு கட்டணம் இல்லை. (62353)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

894 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

இடபம் 03 11 16 22

29-06-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5014659 - 5029283

ஜக்பொட் பரிசு ரூபா. 4,624,650/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 321,815 | 10/- | 3,218,150/- |
| 2 இலக்கங்கள் | 29,521 | 20/- | 590,420/- |
| 1 இல. + லக்கினம் | 29,115 | 30/- | 873,450/- |
| 2 இல. + லக்கினம் | 2,734 | 100/- | 273,400/- |
| 3 இலக்கங்கள் | 801 | 500/- | 400,500/- |
| 3 இல. + லக்கினம் | 71 | 5,000/- | 355,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,624,650/- | - |
| மொத்தம் | | | 6,110,920/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 384,066 | | 7,134,420/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,343,050/-

தொடர் இல.4136423 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 ஜூலை மாதம் 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொனராகலை | 5016657-7-74 |
| களுத்துறை | 5018790-9-05 |
| ஹம்பாந்தோட்டை | 5017778-8-71 |
| கொழும்பு | 5021435-2-52 |
| இரத்தினபுரி | 5028441-3-59 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் (ஐஸ்) புறொயிலர் உயிர்கல் பேட் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை,நல்லூர் (62256)

## விற்பனைக்கு

மில் உபகரணங்கள் (அரைக்கும் ஆலை) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- V.P.N.மில்,கண்டி வீதி, மீசாலை மேற்கு, மீசாலை. (62379)

## தவறிவிட்டது

யாழ் மாநகராட்சி மன்றத்தில் பொதுச்சுகாதார பொறியியற் பிரிவில் கடமைபுரியும் குமாரசாமி கதிர்காமநாதன் என்பவாது தேசிய.அட்டை [530800091V] விசேட அ.கட்டை, அலுவலக கட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய சிறிய பொலித்தீன்பை 28.06.2007 அன்று நாவாந்துறைக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ் மாநகராட்சி மன்றத்தில் ஒப்படைத்துதவவும். T.P.: 0212227302 (62354)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி இராமலிங்கம் பரிமளாதேவி**

தோற்றம் 03.05.1949 | மறைவு 12.07.2006

திதி: துதியை 02.07.2007

உலகிற்கு எம்மைத் தந்து
உத்தமராய் வாழ வைத்த தாயே!
உயிர் உள்ளவரை நினைக்கின்றோம்.

நாவலர் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.

## அகில இலங்கை தமிழ்த் தினப்போட்டி - 2006

### திறந்த போட்டி (விவாதம்)

இதற்கு முதல் வருடத்தைப் போன்று
இம்முறையும்
முதலாம் இடத்தைப் பெற்று கல்லூரிக்கு
புகழ்சேர்த்த


**செல்வன் சந்திரகுமார் கோபிநாத்**
**செல்வன் பரமானந்தம் தர்சானந்**
**செல்வன் சண்முகம் சொலமன்**

ஆகிய எமது கல்லூரி மாணவர்களையும்
இவ்வெற்றிக்கு உறுதுணையாக செயற்பட்ட
ஆசிரியர் திரு. நாக் தமிழிந்திரன்
அவர்களையும்
மனதாரப் பாராட்டுவதுடன் எமது
வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கிறோம்.

யாழ். மத்திய கல்லூரி. ஆசிரியவட்டம். (62359)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 * 06 * 1925



மறைவு 12 * 07 * 2006

**திருமதி பிறிற்டோ அந்தோனியப்பிள்ளை**

அன்பின் திருவுருவாய்
விஞ்சும் பெரு நிலவாய்
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன
ஆண்டொன்று சென்றது அம்மா
எம்மனதில் நிலைத்து இருக்கும்

அணையா ஒளிவிளக்காய்
வழி காட்டிய தெய்வமே
உமது அன்புக்கு ஈடாகுமா
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் அன்பு முகம்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்றமு (02.07.07) திங்கட்கிழமை கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசன் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

6!7 விதானையார் வீதி
ஈச்சமொட்டை (61936)

-குடும்பத்தினர்.

## மல்லாகம் கோட்டைக்காடு


### அருள்மிகு சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தான தேர்த்திருவிழா




இன்று 02-07-2007
திங்கட்கிழமை
காலை 7 மணிக்கு
தேர்த்திருவிழா ஆரம்பமாகி
முற்பகல் 10 மணிக்கு
எம்பெருமானின் தேர்வீதிஉலா
நடைபெறும்.

**சாளம்பை முருகனுடன்**







ஆறுமுகம் இராசு | ஜெயக்கொடி ஜெனார்த்தன் | ஜெயக்கொடி சஞ்சீவன்

கோட்டைக்காடு,
மல்லாகம். (62347)

தேர்த்திருவிழா உபயகாரர்.

## 20 ஆம் வருட அன்பின் நினைவு



அமரர் **செ.திருநாவுக்கரசு**

(சமாதான நீதிவான், முன்னாள் புத்தித்துறை சிங்கர் கொம்பனி முகாமையாளர், முன்னைய உப்பிட்டி கிராம சபைத் தலைவர்.)

அன்னை மடியில் 15-07-1920 | ஆண்டவன் அடியில் 12-07-1987


திதி: (02.07.2007)

அன்புத் தெய்வமே பண்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம்மை ஆளாக்கி
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்டு
இன்றுடன் ஆண்டுகள் பத்தெண்பது சென்றாலும்
என்றென்றும் உங்கள் பாச விளக்கின் ஒளி
அணையாத தீபமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும்
எங்கள் நெஞ்சங்களில் என்றும் அழியாத
சித்திரமாய் நிறைந்திருக்கும் எங்கள் அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்...

உங்கள்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கரணவாய் மத்தி,
கரவெட்டி (62352)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சுப்பையா நடராசா**

(இ.போ.சபை, மட்டக்காப்பு டிப்போ பரிசோதகர்)

மண்ணில் 15-07-1938 | விண்ணில் 26-06-2002

திதி: துதியை(02.07.2007)

ஆண்டுகள் ஐந்து ஆகியும் ஆறவழி காணவில்லை
தங்கள் எழில் முகமும் நினைவுகளும்
என்றும் என் நெஞ்சை விட்டு நீங்காது.

ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறேன்.

சாவகச்சேரி,
மீசாலை மேற்கு. (61937)

-மனைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நியாயத்துக்கு விட்டுக்கொடுக்க கட்டாயப்படுத்தப்படும் கொழும்பு

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச சமூகம் இறுக்கமான - திட்டவட்டமான - ஒரு நிலைப்பாட்டை எடுக்கும் காலகட்டம் வந்துவிட்டது என்றும், இது விடயம் கடந்த மாத இறுதியில் ஒஸ்லோவில் இடம்பெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் முக்கிய அம்சமாக ஆராயப்படும் என்றும் இப்பத்தியில் ஏலவே கோடிகாட்டி வந்தோம்.

உதவி வழங்கும் நாடுகளின் ஒஸ்லோ கூட்டத்தின் பெறுபேறுகள் தொடர்பாக இப்போது மெல்லக் கசியும் செய்திகள், நாம் குறிப்பிட்ட விடயத்தை உறுதிப்படுத்துவனவாகவே அமைந்திருக்கின்றன.

இந்தக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட நான்கு தீர்மானங்களை - முடிவுகளை - இலங்கை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளான இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நேரில் விளக்கவும் இணைத் தலைமைகள் அங்கு இணக்கம் கண்டிருக்கின்றன.

இரு தரப்புகளுக்கும் இணைத்தலைமைகள் தெரிவிக்கும் அந்த நான்கு அம்சத் தீர்மானங்கள் இவைதான்:-

**இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமேயற்றது. நிரந்தர அரசியல் தீர்வே சாத்தியமான ஒரேவழி.*

*கிழக்கில் கருணா குழுவின் செயற்பாடுகள் கவலைக்கும் சிரத்தைக்கும் உரியவை.*

*கிழக்கில் இனவிகிதாசாரத்தை மோசமாகப் பாதிக்கும் நடவடிக்கைகள் ஏற்புடையவை அல்ல. மூதூர், சம்பூர் பகுதிகளிலிருந்து தமிழர்களை வெளியேற்றி, அப்பிரதேசங்களை உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிப்பதும், இதே பிரதேசங்களில் வேறு குடியேற்ற முயற்சிகளை முன்னெடுப்பதும் தீவிர கண்காணிப்புக்கு உரியவை.*

**அரசு மற்றும் புலிகளால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.*

*மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பான - பெரும்பாலும் அனைத்து - சர்வதேசப்பட்டயங்களையும் ஏற்று, ஒப்பமிட்டுள்ள காரணத்தாலும் சட்டரீதியான அரசு என்பதாலும் இலங்கை அரசுக்கு இது விடயத்தில் அதிக பொறுப்பும், சட்டக்கடப்பாடும் உள்ளன.*

** நோர்வேயின் அனுசரணைப் பணியை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளுமானால், இவ்விடயத்தில் தரப்புகளில் ஒன்றான விடுதலைப்புலிகளுடன் அனுசரணைத் தரப்பினர் நேரடியாகச் சென்று தொடர்பாடல்களை நடத்துவதற்கு இலங்கை அரசு இணங்கி, ஒத்துழைக்க வேண்டும்.*

**தமிழர்களின் நியாயமான அபிலாசைகளை நிறைவு செய்யும் நம்பகத்தன்மை மிக்க அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை அரசு முன்வைக்க வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தற்போதைய தீர்வுத்திட்டம் நியாயமான ஒன்றாக ஏற்றுக் கொள்ளத் தக்கதே அல்ல என்றே வாதிடப்படுகின்றது. மாவட்ட மட்டத்துக்கு அதிகாரத்தைப் பகிரும் திட்டம் சமாதான முயற்சிகளை முன்நகர்த்தாது, பின்னடைவுக்குத்தான் தள்ளும்.*

- இந்த நான்கு அம்சங்களையே இரு தரப்புகளுக்கும் நேரில் எடுத்துரைக்க சர்வதேச சமூகத்தின் சார்பில் இணைத் தலைமைகள் தீர்மானித்திருக்கின்றன என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இவ்விடயத்தில் இணைத் தலைமைகளின் நிலைப்பாடு இதுதான் என்பதை உறுதியாக வெளிப்படுத்தும் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் இன்னும் பகிரங்கமாகாத பின்னணியில் -

இந்த நான்கு அம்சத் தீர்மானத்துக்கே அவை வந்துள்ளன என்று ஊடகங்கள் ஊடாகத் தற்போது கசியும் தகவல்கள் உண்மையானால் -

இலங்கை விவகாரத்தில் சர்வதேசத்தின் புதிய போக்குக் கட்டவிழத் தொடங்கியுள்ளது என்பதற்கான தெளிவான அறிகுறியாகவே இவற்றைக் கொள்ளவேண்டும்.

சர்வதேச ரீதியில் இலங்கையின் நிலை சீரழியத் தொடங்கிவிட்டதற்கான அடையாளமாகவே - முன்னறிவிப்புப் பீடிகையாகவே - சர்வதேசத்தின் நிலைப்பாட்டைக் கருத வேண்டும்.

யுத்த முனைப்பிலும் போர் வெறியிலும் தீவிரமாக இருக்கும் ஜனாதிபதி மஹிந்தரின் அரசு, அதன் காரணமாக அமைதி முயற்சிகளை - சமாதான நடவடிக்கைகளை - தீர்வுக்கான எத்தனங்களை - புறமொதுக்கி பொறுப்பற்று நடந்துவருகிறது.

சமாதான முயற்சிகளை உதாசீனப்படுத்தும் இலங்கை அரசுத் தலைமை, அதன் காரணமாக, அமைதி நடவடிக்கைகளின் அனுசரணையாளர்களான நோர்வேயை அப்பணியைச் செய்யவிடாமல் முட்டுக்கட்டையும் போட்டு வருகின்றது. தமது பணியின் ஓர் அங்கமாகப் புலிகளுடன் தொடர்பாடல்களை வைக்கவேண்டிய நிலையில் இருக்கும் நோர்வே அனுசரணைத்தரப்பின் பிரதிநிதிகளை, வன்னிக்குச் சென்று புலிகளைச் சந்திக்க விடாமல் இதுவரை தடுத்துவந்தது கொழும்பு.

ஆனால் இவ்விடயத்தில் சர்வதேச சமூகம் எடுத்த சூடான நிலைப்பாட்டையடுத்து, நோர்வேத் தரப்பு வன்னிக்குச் செல்வதற்கான தடைகளை அகற்றி, கதவுகளைத் திறந்துவிட்டு, முழு ஒத்துழைப்பும் ஒத்தாசையும் வழங்கும் 'தாராளத்துக்கு' கட்டாயப்படுத்தி இறங்கிவர வைக்கப்பட்டிருக்கின்றது இலங்கை.

தனது இராஜதந்திரமற்ற - தூர நோக்கற்ற - யதார்த்தத்தை புறமொறுக்க - அணுகுமுறைப் போக்கினால் சர்வதேச சமூகத்தை மெல்ல மெல்லப் பகைத்துவரும் கொழும்பு, தனது தவறான போக்குக் காரணமாக இவ்வாறு மேலும் பல விடயங்களில் கீழிறங்கி வரவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகும்.

அடுத்து வரும் வாரங்களில் அவை அம்பலமாகும் என ஆவலோடு காத்திருக்கலாம்; பார்த்திருக்கலாம்.

# அடுத்துவரும் மூன்று மாதங்களுக்குள் முக்கிய அரசியல் மாற்றங்கள் ஏற்படுமாம்

## ஐ.தே.க. பிரமுகர்கள் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 2

ஆட்சியாளரின் சர்வாதிகாரத்துக்கு எதிராக பரந்த அளவிலான அரசியல் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொள்ளும் விதத்தில் எதிர்க்கட்சியினருடன் இணைந்து செயற்பட பதவியிலுள்ள சில அமைச்சர்களும் முன்வந்துள்ளார்களாம்.

இத் தகவலை ஐ.தே.கட்சி வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர குழுவினருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி முடித்த கையோடு ஐ.தே.கட்சிப் பிரமுகர்கள் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

அடுத்துவரும் மூன்று மாதகாலம் அரசியல் மட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கப் போகின்றன. அரசியல் துறையில் பல தொடர் நிகழ்வுகள் இடம்பெற வாய்ப்பு உண்டு.

ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க செய்தியாளர் கூட்டமொன்றில் பேசும்போது அரசாங்கத்துக்கு எதிராகப் போராட கூட்டிணையும்படி சகல ஜனநாயகக் கட்சிகளையும் தாங்கள் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

எம்முடன் இணைய வரும் அமைச்சர்களின் பெயர்களை இப்போது நாம் வெளியிட விரும்பவில்லை. ஆனால், அடுத்த சில மாதங்களில் அரசியல் மட்டத்தில் சில முக்கிய மாறுதல்களை எதிர் பார்க்க முடியும் - என்று அவர் கூறினார்.

ஜே.வி.பியினர் ஐ.தே.கட்சியுடன் இணைய விரும்பாதது பற்றி அவர் தெரிவிக்கையில், ஜே.வி.பி. ஒரு சிறு வாக்காளர் வங்கியை மட்டுமே கொண்டு இருக்கின்றது. நாடு முழுவதும் எமக்குப் பெரும் வாக்கு பலம் உண்டு. மிகக் குறைந்த வாக்குகளாலேயே ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் நாம் தோற்றுப்போனோம் என்று அத்த நாயக்க கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்:-

அரசாங்கம் மீண்டும் குற்றவியல் அவதூறு சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து ஊடக சுதந்திரத்தை நசுக்குவதற்கு முயற்சி செய்கின்றது என்று குற்றஞ் சாட்டினார்.

இந்தச் சட்டத்தை மீளவும் கொண்டு வர முயன்றால் அதனை முறியடிக்க எம்மால் முடிந்ததை எல்லாம் செய்வோம் - என்றும் அவர் உறுதியளித்தார். (அ-ப)

## அளவெட்டி மல்லாகத்தில் நேற்றுத் தேடுதல்

அளவெட்டியில் ஒரு பகுதி மற்றும் மல்லாகம் குளமங்கால் அளுக்கைப் பகுதிகள் நேற்று இராணுவத்தினரின் சுற்றிவளைப்புத் தேடுதலுக்கு உள்ளாகின.

இந்தத் தேடுதலின் போது இராணுவத்தினர் நேற்றுக் காலையில் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். சுற்றிவளைப்புத் தேடுதல் பகல் வரை இடம்பெற்ற போதிலும் எவரும் கைதுசெய்யப்பட்டதாக தெரியவில்லை. (அ-1-68)

## தம்பலகாமத்தில் ஆயுதங்கள் மீட்பு

திருகோணமலை - தம்பலகாமம், பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்கஹந்த ஜெயபுரப் பகுதியில் படையினர் ஆயுதங்கள் சிலவற்றை மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் குறித்த பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றதாகவும் அதன் பின்னர் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் ரி-56 ரகத் துப்பாக்கி-01, பிஸ்டல்-01, கைக்குண்டுகள் -08, ஆர்.பி.ஜி -01, கணினி - 01 மற்றும் சில உணவுப்பொருள்கள் போன்றன கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புலிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் பொலிஸார் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

குற்றவியல் அவதூறுச் சட்டம்

# கருத்துச் சுதந்திரம் காக்கப்படும் என்ற அரசின் வாக்குறுதியை மீறும் செயல்!

கொழும்பு, ஜூலை 2

குற்றவியல் அவதூறு சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் முயற்சி தம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதாக சுதந்திர ஊடக இயக்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் 2002 ஜூனில் ரத்துச் செய்யப்பட்ட குற்றவியல் அவதூறு சட்டத்தை மீளவும் நடைமுறைக்குக் கொண்டுவர இப்போதைய அரசு முயற்சிப்பது குறித்து எம்மிடம் நம்பகமான ஆதாரம் இருக்கின்றது. கடந்த ஜூன் 27 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியின் கோரிக்கையின் பேரில் இது தொடர்பாக அவசர அமைச்சரவைப் பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடும் விமர்சன ரீதியிலான செய்தி அறிக்கைகள் வெளியிடப்படுவதை நசுக்கவும் பத்திரிகை ஆசிரியர்களையும் பத்திரிகையாளர்களையும் தொடர்ச்சியான துன்புறுத்தல்களுக்குள்ளாக்கவும் வசதி செய்வதான இந்தச் சட்டம் கடந்த காலத்தில் விரிவாக அமுல்படுத்தப்பட்டு வந்துள்ளது. உதாரணமாக ராவய பத்திரிகை ஆசிரியர் விக்ரர் ஐவன் மீது 2002 ஆம் ஆண்டு முற்பகுதியில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஐந்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதேபோல் வேறு நான்கு பத்திரிகை ஆசிரியர்களும் இவ்வாறான வழக்குகளை எதிர் நோக்கினார்கள்.

இச்சட்டத்தை ரத்துச் செய்வதற்கான தீர்மானம் 2002 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் எல்லா கட்சிகளாலும் ஆதரிக்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

இதனை மீளவும் அமுல்படுத்த முயற்சிப்பதானது இலங்கையில் கருத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பதாக அரசாங்கம் முன் வழங்கியிருந்த வாக்குறுதிகளை மீறுவதாகவுள்ளது - என்று சுதந்திர ஊடக அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. (அ-ப)

# கடற்படையின் உழவு இயந்திரம் மண்டைதீவுக் கடலில் பாய்ந்தது!

யாழ்ப்பாணம், ஜூலை 2

கடற்படையினரின் உழவு இயந்திரம் வீதியை விட்டு கடலில் பாந்தது. அந்த விபத்தில் இரண்டு கடற்படையினர் காயங்களுக்கு உள்ளாகியதாகத் தெரியவருகின்றது.

மண்டைதீவுச் சந்திக்கு அண்மையாக நேற்றுக்காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

உழவு இயந்திரத்தின் முன்சில்லு அச்சு உடைந்ததைத் தொடர்ந்து குறிப்பிட்ட உழவு இயந்திரம் பாதையை விட்டு கடலில் பாய்ந்த போதிலும் உழவு இயந்திரத்தின் பெட்டி இயந்திரத்தில் இருந்து கழன்றமையால் சேதம் குறைவாக காணப்பட்டதாக விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவிக்கிறார்கள்.

விபத்துக்குள்ளான உழவு இயந்திரத்தை கடற்படையினர் பின்னர் கடலில் இருந்து வெளியே எடுத்தனர். (அ-1-68)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளில் சுயாதீன சட்டத்தரணிகளே ஆஜராக வேண்டும்

## மிகக் கண்டிப்பாகச் சொல்கிறார் நீதியரசர் பகவதி



ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரணைகளில் ஆஜராகி வாதிடுபவர்கள் சுயாதீன சட்டத்தரணிகளாக இருக்க வேண்டும். சட்டமா அதிபரின் திணைக்களத்தைச் சேர்ந்த வர்களாக இருக்கலாகாது.

17 மனிதநேய பணியாளர்கள் மற்றும் இதேபோன்ற 17 முக்கிய கொலைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகளை அவதானிப்பதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள 11 பேர் கொண்ட சர்வதேச நிபுணர் குழுவின் தலைவர் பி.என்.பகவதி இக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசரும் ஐ.நா. மனித உரிமைக் குழுவில் ஓர் உறுப்பினருமான பி.என்.பகவதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் சர்வதேச நிபுணர்கள் அவதானிப்புக் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி அழைக்கப்பட்டவர்.

குழுவின் தலைவர் என்ற முறையில் கடந்த மாதம் அவர் இரண்டு அறிக்கைகளை வெளியிட்டிருந்தார். அதில் இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் தலையீடு பற்றியும் குறிப்பிட்டிருந்தார். இவ் அறிக்கைகளைக் கண்டித்து சட்டமா அதிபர் சி.ஆர்.டி. சில்வா விடுத்திருந்த அறிக்கையில் நீதியரசர் பகவதியின் செயற்பாட்டை கடும் சொற்களால் கண்டித்திருந்தார்.

இந்த அறிக்கைகள் தொடர்பாக முன்னாள் நீதியரசர் பகவதி தெரிவித்திருப்பதாவது:-

விமர்சனத்தை நான் வரவேற்கின்றேன். ஆனால் அதற்கு சட்டமா அதிபர் பயன்படுத்தியுள்ள மொழிநடை அவர் வகிக்கும் பதவிக்குத் தகுந்ததாயில்லை.

ஆணைக்குழு விசாரணையில் சுயேச்சையான சட்டத்தரணிகள் ஆஜராக வேண்டும் என்பதை நான் தொடர்ந்தும் வலியுறுத்துகிறேன். ஆணைக்குழுவின் முன் எம்மாதிரியான பொருள்களை தாக்கல் செய்ய வேண்டும் என்பதை சுயாதீன சட்டத் தரணிகளே முடிவு செய்ய வேண்டும்.

### சட்டமா அதிபர் திணைக்கள உதவியை நாடுவது தவறல்ல

எது பொருத்தமானது எது பொருத்தமற்றது உண்மையைக் கண்டுபிடிக்க மேலும் புலனாய்வுகள் செய்யப்பட வேண்டுமா என்பதை எல்லாம் அவர்களே முடிவு செய்யவேண்டும். இதற்கு அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியை நாட முடியும்.

புலனாய்வுகள் முடிவுபெற்ற ஒரு நிலையில் நடைபெறும் ஒரு விசாரணையல்ல இது. உண்மையைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு விசாரணை ஆணைக் குழுவாகும். இவ்வாறுதான் இந்தியா மற்றும் ஏனைய நாடுகளில் ஆணைக் குழு விசாரணைகள் நடைபெறுகின்றன.

### இப்பொழுதும் எதிர்க்கிறேன்

சுயாதீன சட்டத் தரணிகளின் பணிகளை சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கையாள்வதை நான் இப்பொழுதும் எதிர்க்கின்றேன். அரச தரப்பில் சட்டமா அதிபர் செயற்படலாம். ஆனால், சுயாதீன சட்டத்தரணிகளின் இடத்தில் அரச சட்டத்தரணி ஒருவர் இருப்பது பொருத்தமல்ல. பிரதி சொலிசிற்றர் ஜெனரலும் கூட நியமிக்கப்படலாகாது. குழுவில் நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர்கள் 11 பேரும் இதே கருத்தைத் தான் கொண்டுள்ளோம். சுயாதீன சட்டத் தரணிகள் விசாரணையில் ஈடுபட வேண்டும் என்பதில் தெளிவாக இருக் கிறோம். எமது நிலை சரியானதா தவறானதா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு நீதியரசர் பகவதி கூறியிருக்கிறார். இது தொடர்பாக அவர் சட்டமா அதிபருக்கும் ஜனாதிபதிக்கும் கடிதங்களை எழுதவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (அ-ப)

## நாளை

ஆனி - 19 செவ்வாய்க்கிழமை 03.07.2007

திதி : திருதியை முன்னிரவு 06.30

நட்சத்திரம் : திருவோணம் முன்னிரவு [illegible]

சுபநேரம் : 10.27 - 11.57

ராகுகாலம் : 02.57 - 04.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் ஐ.நா. நிறுவனங்களின் பணி எரிபொருள் இன்றி முடங்கும் ஆபத்து

## அரசுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 02

**வன்னியில் செயற்படும் ஐ. நா. நிறுவனங்களுக்கு எரிபொருள் விநியோகிப்பதற்கு அரசு முட்டுக்கட்டை ஏற்படுத்தியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை குற்றஞ்சாட்டியிருக்கின்றது.**

**வாகனங்களையும், மின்பிறப்பாக்கிகளையும் இயக்குவதற்கு மிகவும் அவசியமான எரிபொருள்கள் வழங்குவதை அரசு நீண்ட நாள்களாகத் தடுத்திருப்பதால் தனது அலுவலக செயற்பாடுகள் பாதிக்கப்படும் ஆபத்து உருவாகி இருப்பதாகவும் இலங்கை அரசுக்கு ஐ.நா தெரிவித்திருக்கிறது.**

எரிபொருள் விநியோகம் தடைப்பட்டிருப்பது மின்சாரப் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது. இதனால் குளிரூட்டிகளில் வைத்து அத்தியாவசிய உயிர்காப்பு மருந்து வகைகள் மற்றும் ஊசி மருந்துகளைப் பாதுகாக்க முடியாத நிலையும் உருவாகி வருவதாக ஐ. நா. ஒரு கடிதத்தில் இலங்கைஅரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஐ. நாவின் வதிவிட மற்றும் மனிதாபிமான செயற்பாடுகளுக்கான இணைப்பாளர் பிரெட் றிக் லியொன்ஸ், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

வன்னிப்பிரதேசத்தில் இயங்கும் தமது மனிதாபிமானப் பணிகளுக்கான நிறுவனங்கள் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் எழுத்துமூலமான அனுமதியைப் பெற்றுக்கொண்ட போதிலும் கடந்த ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களுக்கான எரிபொருள் இன்னும் வழங்கப்படவில்லை என்று அக்கடிதத்தில் ஐ. நா. இணைப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசின் இத்தகைய செயற்பாட்டால் வன்னிப் பிரதேசத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகங்கள் தமது பணிகளைப் படிப்படியாகக் குறைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்றும் மின் பிறப்பாக்கிகள் மற்றும் வாகனங்கள் பயன்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது'' என்றும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 15 ஆம் திகதி எழுதப்பட்ட அக்கடிதத்தில் கிளிநொச்சியில் உள்ள உலக உணவுத் திட்ட அலுவலகத்தில் 4 அல்லது 5 நாள்களுக்குப் போதுமான எரிபொருள்கள்தான் கையிருப்பில் உள்ளன என்றும் இரவு நேரங்களில் மின் பிறப்பாக்கிகள் இயக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய செயற்பாட்டினால் ஐக்கிய நாடுகள் சபைப் பணியாளர்களினது பாதுகாப்பும் பாதிக்கப்படுவதாகவும் அதில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகம், உலக உணவுத்திட்டம், சிறுவர் நிதியம், அபிவிருத்தித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு அலுவலகங்கள் வன்னியில் இயங்கி வருகின்றன.

## பேராதனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரின் நடமாட்டத்தையும் அவதானித்த களஞ்சிய உத்தியோகத்தர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அந்த இடத்திற்கு வந்த பொலிஸார் குறிப்பிட்ட இருவரையும் கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் 17 வயதுடையவர்கள் என்றும், அவர்கள் நுவரெலியா பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. (சி)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'எங்களது பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டால் நாம் அங்கு சென்று விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு எப்போதும் தயாராகவே இருந்தோம்.

'நாங்கள் கிளிநொச்சிக்குப் பாதுகாப்பாக போய் வரலாம் என்ற உத்தரவாதம் கிடைத்தவுடனேயே நாம் அங்கு செல்ல தயாராக இருக்கிறோம்.' என்று விசேட சமாதானத் தூதுவர் ஹன்சர் போவர் கூறினார்.

விசேட சமாதானத் தூதுவர் போவரும், நோர்வேயின் சர்வதேச விவகாரங்களுக்கான அமைச்சர் எரிக் சொல்ஹெய்மும் இலங்கைஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவை கடந்த (ஜூன்) மாதம் 15ஆம் திகதி ஜெனிவாவில் சந்தித்துப் பேசியிருந்தனர்.

அப்போது - அந்தப் பேச்சுக்கள் நன்றாக அமைந்தது என்று தெரிவித்த போவர் அது குறித்து விவரித்துக் கூற மறுத்திருந்தார்.

இதேவேளை -

நோர்வேயை அதன் அனுசரணைப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு இலங்கை அரசாங்கம் கேட்டிருப்பதாக இலங்கையிலும் இந்தியாவிலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கம்போடியாவில் 2 வருடமாகியும் விசாரணை இன்னும் இல்லை; இலங்கையில் 4 மாதங்களில் விசாரணை ஆரம்பித்ததை குறைகூறுவது சரியா?

### நீதியரசர் பகவதியிடம் ஹொகன கேட்கிறார்

கொழும்பு,ஜூலை 02

கம்போடியாவில் நியாயசபை அமைத்து 2 வருடமாகியும் மனித உரிமைகள் தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்படவில்லை.

இலங்கையில் மனித உரிமை மீறல் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு 4 மாதங்களில் விசாரணைகளை முன்னெடுத்துச் செல்கின்றது.

இந்நிலையில் விசாரணைகளில் காலதாமதம் எனக் கூறுவது சரியா?

இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார் வெளிவிவகார அமைச்சு செயலாளர் பாலித ஹொகன.

நேற்று இந்துஸ்தான் ரைம்ஸ் ஊடகத்திற்கு நீதியரசர் என்.பி.பகவதி வெளியிட்ட கருத்துத் தொடர்பாக இவர் தமது விசனத்தைத் தெரிவித்துள்ளார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என அந்தக் குழுவுக்கு தலைமை வகித்த் சர்வதேச பிரபல்யம் வாய்ந்த பி.என். பகவதி வெளியிட்ட கருத்து உண்மைக்குப் புறம்பானது; ஏற்றுக்கொள்ளமுடியாதது.

உலக அரங்கில் இவ்வாறான விசாரணைகளைப் பார்க்கும்பொழுது யுகோஸ்லாவிய நியாயசபை விசாரணை தமது நாட்டு விசாரணைகளை மேற்கொள்ள 18 மாதங்கள் எடுத்தன.

கம்போடியா நியாயசபை கடந்த இரண்டு வருடத்துக்கு மேலாக மனித உரிமை தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கவில்லை.

இந்த நிலையில் இலங்கையில் மனித உரிமை மீறல் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதிஆணைக்குழு நான்கு மாதங்களில் தமதுவிசாரணைகளை முன்னெடுத்துச் செல்கின்றது என்பது கவனத்துக்குரிய விடயமாகும்.

இதனை அந்த விசாரணைக் குழுவின் தலைவராக இருந்து செயற்பட்டவர் தெரிவிப்பது ஏறுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல - இவ்வாறு தெரிவித்துள்ளார். (சி)

(நீதியரசர் பகவதியின் பேட்டி 7ஆம் பக்கத்தில்)

## வெளிவிவகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று இலங்கை தெரிவித்திருந்த பின்னணியிலும் -

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், சீனா அல்லது பாகிஸ்தானிடம் இருந்து இலங்கை ஆயுதக் கொள்வனவு செய்வதை விரும்பவில்லை என்று தெரிவித்த பின்னணியிலும்

இலங்கை அமச்சரின் விஜயம் அமைவதால் - இந்தியாவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது குறித்து இலங்கை அமைச்சரின் இந்த விஜயத்தின் போது ஆராயப்படும் என்று கருதப்படுவதாகவும் செய்தி ஏஜென்சிகள் ஊகம் தெரிவித்துள்ளன. (அ-1)

## கட்டுநாயக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமான நிலையத்தின் பாதுகாப்பு இப்போது மிகவும் திருப்திகரமாக இருக்கின்றது. இதன் காரணமாக இரவு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விமானப் படையினர் போதிய வசதிகளை செய்துள்ளனர் -என்று விமான நிலைய முகாமையாளர் நேற்றுத் தெரிவித்தார். (அ-1)

## அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின்னர் அப்பகுதி மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார் என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

## நீதிக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். விடுதலைப் புலிகளின் நிதி சேகரிப்பு தடுக்கப்படவேண்டும். மனித உரிமைகளைக் கண்காணிப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபைக் குழுவை நியமிப்பது தொடர்பாக செயற்பாடுகளை வலுப்படுத்த வேண்டும்.இலங் கையில் அமைதிவழித் தீர்வு ஏற்படுத்த அமெரிக்கா தனது முயற்சிகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

பிறைஸ் (வட கரோலினா), ஹோல்ட் லண்டோஸ், வெக்ஸ்லெர், க்ரௌலி, ப்ராங், சேப்ஸ், லீ, பொர்டலோ, சாக்கௌக்சி, லோப்கிரென், ஹின்செ, மொறன், டிலௌவ்றோ, கேர்ட்னி, சுட்டொன், ஸ்டார்க், ஹிக்கின்ஸ், பத்தா, டேவிஸ் (இல்லினாய்ஸ்), சேர்மன், ஹஸ்டிங்க்ஸ், கபுனோ, கம்மிங்க்ஸ், பேயன், ரூப்ரெஸ்பெர்கர், கில்டி, மார்க்கே, பல்ட்வின், ஹொண்டா, திபேரி, மூரே, அகெர்மன், ஆ அண்ட் பலோன் ஆகியோர் அதில் கையெழுத்திட்டுள்ளனர். (சி)

## சமாதானத் தூதுவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறார். மேற்படி ஒன்றியத்தின் தலைமைத்துவத்தை தற்போது ஜேர்மனே வகித்து வருகிறது.

இவர் தமது பதவிக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறார் என்று சில மாதங்களுக்கு முன்னர், இவர் மீது இலங்கை அரசு குற்றஞ்சுமத்தி வந்துள்ளது. அரசின் சீற்றத்துக்கும் இவர் ஆளாகியிருந்தார்.

இப் பிரச்சினை தலைதூக்கிய சமயத்தில், இத்தூதர் விடுமுறையில் தமது நாடு சென்றிருந்தார். இவருக்கு எதிராக எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இலங்கை நிலைமை தொடர்பாக இணைத்தலைமைகள் எடுத்துள்ள நான்கு அம்ச முடிவுகள் வருமாறு:-

★ இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலான வழிமுறை தீர்வாகாது. அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான தற்போதைய பிணக்குக்கு, நிலையான அரசியல் தீர்வே அவசியம்.

கிழக்கில் இடம்பெறும் கருணா குழுவினரின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதில் கருத்துச் செலுத்தப்பட்டது.

கிழக்கில் தலைதூக்கும் மாற்றங்கள், இனச்சமன்பாட்டில் மாற்றத்துக்கு வழிசமைத்துவிடும். இவை மூதூர் - சம்பூர் பகுதிகளை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டமையை அடிப்படையாகக் கொண்டவை.

இப்பகுதிகளிலிருந்து, தமிழ்பேசும் மக்கள் வெளியேறிவிடுவதற்கு இந்நடவடிக்கை ஏதுவாகிவிடும். அத்துடன், இடம்பெயர்ந்தோரை இப்பகுதிகளில் மீளக்குடியேற்றுவதற்கான அரசின் திட்டமாக இது இருக்கலாமென்றும் கருதப்படுகிறது.

★ மனித உரிமை துஷ்பிரயோகங்களை அரசும் விடுதலைப்புலிகளும் கைவிடவேண்டும். அனைத்துத் தரப்புக்களாலும் கட்டவிழ்க்கப்படும் காணாமற்போகுதல், ஆட்கடத்தல்கள் ஆகிய நடவடிக்கைகளாலும், விடுதலைப் புலிகளின் பலவந்த ஆள்திரட்டலாலும் தற்போதைய பிணக்குக்கு பரிகாரம் கண்டுவிட இயலாது.

இலங்கை அரசு, சகல மனித உரிமைகள் மாநாடுகளிலும் ஒரு தரப்பாக பங்குபற்றியுள்ளது. அதேவேளை, அது ஜனநாயக ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஓர் அரசு. எனவே மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கூடிய பொறுப்பும் சட்டரீதியிலான கடப்பாடுகளும் அதற்கு உண்டு.

மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பாக, இலங்கை அரசு தெட்டத் தெளிவான பணிப்புரைகளை பொலிஸாருக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் வழங்கவேண்டும்.

வன்னி உட்பட சம்பந்தப்பட்ட பகுதிகளிலுள்ள உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிட்டுவதற்கும் அரசு வழிசமைக்க வேண்டும்.

★ சமாதான முன்னெடுப்புகளுக்கும் பேச்சு மேசைக்கும் இரு தரப்புகளையும் மீளக் கொணருவதற்கு, நோர்வேயை ஒரு சமாதான அனுசரணையாளராக இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளுமானால், கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தைச் சந்திப்பதற்கு ஒஸ்லோ அனுமதிக்கப்படவேண்டும்.

★ தமிழர்களின் உண்மையான துயரங்களைத் துடைப்பதற்கான நம்பகத்தன்மையினை அரசியல் திட்டமொன்று அரசால் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய யோசனைகள் நம்பகத்தன்மை கொண்டவை என கருதப்படமாட்டாதென வாதிடப்படுகிறது.

மாவட்டமட்ட பகிர்ந்தளிப்பு, முன்னெடுப்புகளை பின்னோக்கித் தள்ளிவிடும். இந்த யோசனைகள் நம்பகத்தன்மை கொண்டவை என உணரப்பட்டால், அவற்றிற்கான சர்வதேச ஆதரவு ஒருங்கே திரட்டப்பட வேண்டும்.

இவ்வாறு இணைத்தலைமை தெரிவித்துள்ளது. (சி)

## தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டைத் தெரிவிக்காமையினால் அரசு தனது நிலைப்பாட்டை முதலில் தெரிவிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுக் கொள்வதற்கு இடமுள்ளதெனவும் அறியக் கிடைத்துள்ளது - என்று சிங்களப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக சுதந்திரக்கட்சி சமர்ப்பித்துள்ள யோசனைகளை அரசின் உத்தியோகபூர்வமான நிலைப்பாடென ஏற்றுக்கொள்ள முடியாதென ஐக்கிய தேசியக் கட்சி இணைத் தலைமைக்கு அறிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் அரசு இறுதி அரசியல் தீர்வை முன்வைக்காவிடின், அது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வதற்காக உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை மீண்டும் சுமார் மூன்று மாதங்களில் கூடும் என்றும் அறியமுடிகிறது. (சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org